# விடுதலைப்புலிகள்

குரல்: 64 1-15 சித்திரை 1996 அன்பளிப்பு: 5/=



உள்ளே

* சமாதானப் போரும் தமிழ் மக்களும்
* சிங்கள இனவாதத்திற்கு ஒரு மறுப்பு
* சந்திரிகாவின் கோட்பாட்டை தமிழினம் ''மௌனம் கலைந்து'' நிராகரித்தது.
* புலிகள் பயங்கரவாத அமைப்பா: விடுதலை இயக்கமா?
* 'தமிழன் கனவு' நனவாகும்


### கொழும்பு துறைமுகத்தினுள் கரும்புலிகளின் துணிகரத் தாக்குதல்

# சிறீலங்கா பொருளாதாரக் கேந்திரங்களில் தொடர்ச்சியாக விழுகின்ற பலத்த அடிகள்!

### தாக்குதல் அச்சுறுத்தல்களால் அரசு பீடத்தில் பேரதிர்ச்சி


**தெ**ன்னாசியப் பிராந்தியத்தின் வர்த்தகக் கேந்திர முக்கியத்துவம் வாய்ந்ததான கொழும்புத் துறைமுகத்தினுள் ஊடுருவி, கடற்கரும்புலிகள் நடாத்திய அதிரடித் தாக்குதலானது, சிறீலங்காவின் பொருளாதாரக் கட்டுமானத்தில் மீண்டுமொரு பாரிய தாக்கத்தை ஏற்படுத்தியுள்ளது. ஏற்கெனவே, கொலன்னாவ, ஊறுகொடவத்த எரிபொருள் சுத்திகரிப்பு - களஞ்சியத் தளங்களின் மீது நடாத்தப்பட்ட திகைப்பூட்டும் அதிரடித் தாக்குதலினாலும், மத்திய வங்கிக் கட்டடத் தொகுதியைக் குறிவைத்து, சிறீலங்காவின் நிதிநகரத்தின் மீது நடாத்தப்பட்ட 'எல்லாளன் படை'யின் மாபெரும் குண்டுத் தாக்குதலினாலும் சிங்களப் பொருளாதாரம் ஆட்டம் கண்டுள்ள வேளையில் புலிகள் இத் தாக்குதலை நிகழ்த்தியமை,சிங்கள அரசின் உயர்பீடத்தில் பேரதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

தாக்கப்படவுள்ளது என்ற அச்சத்தின் காரணமாக உச்சக்கட்டப் பாதுகாப்புக்கு உட்படுத்தப்பட்டிருந்த - கேந்திர முக்கியத்துவம்மிக்க ஒரு மையத்தில் நடாத்தப்பட்ட தாக்குதல் என்ற வகையில் இராணுவ ரீதியாகவும்-

சர்வதேச வர்த்தகப் போக்குவரத்துத் தொடர்புகளையும்,தென்னாசியப் பிராந்தியக் கடற்போக்குவரத்துப் பாதையில் உள்ள கேந்திர நிலையமாக விளங்கியதால் - துறைமுகம் பெற்றுத்தந்த பெரும்வருமானத்தையும் பாதித்துவிட்டது என்ற வகையில் பொருளாதார ரீதியாகவும் இத்தாக்குதல் முக்கியத்துவத்தைப் பெறுகின்றது.

அதே சமயம், வடக்கில் படையெடுப்புக்களை அரசு தீவிரப்படுத்துமானால், தெற்கில்,பேரழிவுகளை எதிர்கொள்ள வேண்டிவரும் என்ற எச்சரிக்கையை இத்தாக்குதல்கள் சிங்கள அரசுக்கு விடுத்துள்ளன.

''போர்மூலம் சமாதானம்'' காணப் புறப்பட்ட சந்திரிகாவின் அரசியல் கொள்கையானது, யுத்தத்தை சிங்களத் தேசம் எங்கும் விரிவுபடுத்தவே வழிவகுக்கின்றது என்ற உண்மையையும் இத்தாக்குதல்கள் மீண்டும் மீண்டும் தெரியப்படுத்துகின்றன. O



''தேசத்தின் புயல்''களோடு '' புயலின் மையம் ''; கடற்கரும்புலி வீரர்களுடன் தேசியத் தலைவர்

## தமிழீழ விடுதலைப்புலிகளின் அதிகாரபூர்வ ஏடு


www.eelamview.com

Liberation Tigers Of TAMIL EELAM

## புலிகளின் குரல்

# சமாதானத்திற்கான போரும் தமிழ் மக்களும்!

தமிழரின் இனப் பிரச்சினையைத் தீர்த்துவைக்கும் அரசியல் நேர்மை சந்திரிகா அம்மையாரிடம் இல்லாதிருப்பதுதான், இனச்சிக்கல் இப்போது கூர்மை அடைந்திருப்பதற்கான முக்கிய காரணியாகும்.

தமிழரின் போராட்ட நியாயங்கள் பற்றியோ அல்லது இந்த விடுதலைப் போராட்டத்திற்கு உள்ள மக்கள் ஆதரவு பற்றியோ, அம்மையார் விளங்கிக் கொள்ள மறுக்கின்றார். இந்தத் தேசிய விடுதலைப் போராட்டத்திற்குத் தலைமை தாங்கி – வழிநடாத்தும் புலிகள் இயக்கத்தின் தேசிய பாத்திரத்தை அல்லது ஆயுதப் போராட்டம் பிறந்து – வளர்ந்த வரலாற்றுச் சூழலை, அம்மையார் ஏற்றுக் கொள்ள மறுக்கின்றார். இதனாலேதான் ''புலிகளுக்கு இராணுவத்தீர்வு; தமிழ்மக்களுக்கு அரசியல் தீர்வு'' என்று முட்டாள்தனமான திட்டங்களை நடைமுறைப்படுத்த அவர் விழைகின்றார்.

தமிழினத்தின் அரசியல் பிரதிநிதிகளான புலிகள் இயக்கத்தை நிராகரித்துவிட்டு, தமிழரின் விரோதிகளாகச் செயற்பட்டு தமிழ் மக்களுக்குத் துரோகம் இழைத்துவரும் தமிழ்க் குழுக்களை தமிழரின் அரசியல் பிரதிநிதிகளாக அம்மையார் அங்கீகரிப்பதால் – இலங்கையின் இனப் பிரச்சினையில் எந்த மாற்றமும் நிகழப்போவதில்லை. தமிழ் மக்களின் பிரச்சினையை அரசியல் வழிமுறைகள்மூலம் தீர்த்துவைக்க விரும்பியிருந்தால், முதலில் அவர், தமிழர் நிலத்தின் அரசியல் யதார்த்தத்தை ஏற்றுக்கொண்டிருக்கவேண்டும். ஆனால், அப்படியான நேர்மையைக் கடைப்பிடிக்க அம்மையார் முன்வரவில்லை.

அரசியலில் நேர்மையைக் கடைப்பிடித்து – அரசியல் அணுகுமுறைகள்மூலம் இனப் பிரச்சினையைத் தீர்த்து – போரை முடிவுக்குக் கொண்டுவருவதற்குப் பதிலாக தமிழ் மக்கள் மீது இராணுவ பலத்தைப் பயன்படுத்தி அவர்களின் விடுதலை எழுச்சியை ஒடுக்க, சில அரசியல் தந்திரோபாயங்களை நடைமுறைப்படுத்துவதிலேயே, அம்மையார் அக்கறைகாட்டுகின்றார்.

ஜெயவர்த்தனா – விஜேதுங்கா போன்ற வெளிப்படையான பேரினவாதிகளைப்போல, இராணுவ வழிமுறையே இனப் பிரச்சினைக்கான தீர்வு என்று பிரகடனப்படுத்தாது, பேச்சுவார்த்தை – தீர்வுத்திட்டம் – சமாதானத்திற்கான போர் என்று, சர்வதேச உலகை ஏமாற்றும் வகையில் – அரசியல் தந்திரோபாயங்களைக் கைக்கொண்டு தமிழரின் தேசிய எழுச்சியை நசுக்க, சந்திரிகா அம்மையார் கங்கணம் கட்டி உள்ளார்.

பேச்சுவார்த்தை முறியும்படியான புறச்சூழலை ஏற்படுத்திவிட்டு போரைத் தொடங்கிய அம்மையார், அதற்கு ''சமாதானத்திற்கான போர்' என்று பெயர் சூட்டினார். போர் விமானங்கள் – பீரங்கிகள் – எறிகணைகள் கொண்டு அம்மையார் நடாத்திய ''சமாதானப் போரால்'' 5 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் தமது வீடுகளில் இருந்து விரட்டப்பட்டனர். அவர்களது இயல்பான வாழ்க்கையை ''சமாதானத்திற்கான போர்'' விழுங்கி – ஏப்பம் விட்டுள்ளது. அதேவேளை, இந்தச் சமாதானத்திற்கான போரில் அரசுப் படைகள் பெற்ற வெற்றியை – ஒரு தேசிய வெற்றிபோல – விழாஎடுத்துச் – சந்திரிகா அரசு கொண்டாடியது! இப்போது, சமாதானத்திற்கான இரண்டாவது படை எடுப்பை வடதமிழீழம்மீது மேற்கொள்ள, அம்மையார் உத்தேசித்துள்ளார். இடம் பெயர்ந்து அவல வாழ்வு வாழும் மக்களை மீண்டும் துன்புறுத்துமுகமாக – சமாதானத்தின் பெயரால் – அந்தப் படை எடுப்பை அம்மையார் நிகழ்த்தப் போகின்றார்.

''சமாதானத்திற்கான போர்'' என்ற அம்மையாரின் சித்தாந்தம், இலங்கைத் தீவின் இனப்பிரச்சினையை மேலும் சிக்கலாக்கியுள்ளது. சிங்கள அரசு முன்னெடுக்கும் சமாதானப் பேச்சுக்களின் இலக்குகள் தொடர்பாக, தமிழ் மக்களிடம் ஏற்கெனவே உள்ள சந்தேகங்கள் இப்போது நிரூபணமாகத் தொடங்கியுள்ளன. இது, எதிர்காலத்தில் சமாதானப் பேச்சுக்கள் என்ற அரசியல் நடைமுறையை அர்த்தமற்றதாகவும் – நடைமுறைச் சாத்தியமற்றதாகவும் மாற்றும் அபாயம் எழக் களம் அமைத்துக் கொடுத்துள்ளது. அந்தளவுக்கு, சமாதானப் பேச்சுக்கள் என்ற அதிஉயர் அரசியல் நடைமுறையை, சந்திரிகா அம்மையார் இழிவுபடுத்தி வருகின்றார்.

இதேவேளை, இனப் பிரச்சினைக்கான தீர்வு தொடர்பான அம்மையாரின் தற்போதைய கொள்கையால, போர் தீவிரமடைந்து வருகின்றது. ''இராணுவச் செலவினங்களை நாட்டின் அபிவிருத்திக்குப் பயன்படுத்துவோம்'' என்ற அம்மையாரின் தேர்தல் கோஷம் இன்று தலைகீழாக மாறிவிட்டது. நாட்டின் அபிவிருத்திக்குரிய பணத்தை போருக்குச் செலவிட வேண்டிய அளவுக்கு, ஆயுதப் பெருக்கம் அதிகரித்துள்ளது. இந்த அழிவாயுதங்கள் தமிழர் நிலத்தில் ஏற்படுத்திவரும் மனித சோகங்களும் பொருள் அழிவுகளும் – அவை ஏற்படுத்தும் விளைவுகளும், இன முரண்பாட்டை மேலும் மேலும் சிக்கலாக்குகின்றன. இந்தவகையில், சந்திரிகா அரசாங்கமே இந்த உயர் அழிவுகளுக்கும் – பொருள் நாசத்திற்கும் முழுப் பொறுப்பாகும்.

''சமாதானத்திற்கான போர்'' என்ற அம்மையாரின் சித்தாந்தம் இன்று, சமாதான முயற்சிகளை குழிதோண்டிப் புதைக்கும் அரசியல் சூழலையே பிறப்பித்து வருகின்றது. அம்மையார் வெளியிட்டுள்ள தற்போதைய தீர்வுத்திட்டம் அர்த்தமற்ற ஒன்று என்பது, பெரும்பாலானது கருத்து. ஆயினும், இந்தத் தீர்வுப்பொதியைக் கருத்தில் எடுக்காது ஒட்டுமொத்தமாகப் புறக்கணிக்கும் தமிழ் மக்களின் மனநிலை ''சமாதானத்திற்கான போரின்'' விளைவுகளில் ஒன்று என்றால், அது மிகையாகாது.

இத்தகைய சூழ்ச்சிகரத் திட்டங்களை – நேர்மை அற்ற செய்கைகளை – சந்திரிகா அம்மையார் கைவிடாதவரை, இனப் பிரச்சினைக்குத் தீர்வாக அவர் வைக்கும் எந்த ஒரு தீர்வும், தமிழரின் அரசியல் சந்தையில் விலைபோகாது; அத்துடன், இராணுவ அரங்குகளிலும் அவருக்கு வெற்றியைத் தேடிக்கொடுக்க மாட்டாது! O

# மௌனம் கலைந்து குமுறி எழுந்த தமிழினம் சந்திரிகாவின் கோட்பாட்டை நிராகரித்தது!

''போர்மூலம் சமாதானம்'' என்ற சந்திரிகாவின் கொள்கைத் திட்டத்திற்கு எதிராக தமிழ் மக்கள், தமது ஒன்றுதிரண்ட எழுச்சிக் குரலை எழுப்பத் தொடங்கியுள்ளனர். அந்த வகையில் – தம் வாழ்விடங்களின் மீது பெருமெடுப்பிலான படை ஆக்கிரமிப்புக்களை ஏவிவிட்டுள்ள, சந்திரிகாவின் ''சமாதானத்துக்கான போர்'' என்ற கோட்பாட்டை நிராகரித்து, சிங்கள அரசுக்குத் தமது கண்டனத்தைத் தெரிவிக்குமுகமாகவும், சர்வதேச சமூகத்திற்கு தம் கருத்தை வெளிப்படுத்துமுகமாகவும் மாபெரும் மனிதச் சங்கிலிப் பேரணியொன்றை தமிழ் மக்கள் குடாநாட்டில் நடத்தியுள்ளனர்.

யாழ்ப்பாணத்தின்மீது 'சூரியப் பிரகாசம்' படையெடுப்பை நடாத்தி, அதன்மூலமாக வலிகாமத்தின் ஐந்து இலட்சம் மக்களைத் தம் சொந்தக் குடியிருப்புக்களிலிருந்து இடம் பெயரச் செய்துவிட்டு –

அவ்வாறு இடம்பெயர்ந்த மக்கள் தஞ்சம் புகுந்திருக்கும் வடமராட்சி, தென்மராட்சி, வன்னிப் பகுதிகள் மீது புதியதொரு மிகப்பிரமாண்டமான படையெடுப்பை நிகழ்த்துவதற்கான பூர்வாங்கத் தயாரிப்புக்களை மேற்கொண்ட வண்ணம் –

'இந்திய பிஸ்னஸ் வீக்' சஞ்சிகையின் செய்தியாளருக்கு 'ஸ்ரார்' காட்சி வானொலிக்காக வழங்கிய முக்கியத்துவம் மிக்க செவ்வியில், தன்னால் இயல்பு வாழ்க்கை முற்று முழுதாகச் சீரழிக்கப்பட்டுள்ள தமிழ் மக்களை நோக்கி –

அவர்கள், ''மௌனமாக இருக்காமல், அடைப்புக்களிலிருந்து இனி வெளியேவந்து, தமது கருத்துக்களை மனம் திறந்து வெளியிட வேண்டும்'' என்று கூறினார், சந்திரிகா அம்மையார் அவர்கள்.

அவரது கூற்றிற்கிணங்க, மௌனம் கலைந்து குமுறி எழுந்த தமிழினம், ஏப்ரில் 10 ஆம் நாளன்று, யாழ். குடாநாட்டின் வீதிகளிலிறங்கி பல்லாயிரக்கணக்கில் அணிதிரண்டு, மாபெரும் மனிதச் சங்கிலிப் போராட்டமொன்றை நடாத்தி –

சந்திரிகா அம்மையாரின் ''போர்மூலம் சமாதானம்'' என்ற கோட்பாட்டை முற்றாக நிராகரித்து, தமது ஏகோபித்த எதிர்ப்புக் குரலை அவருக்கும்: தமது சுயகருத்தைச் சர்வதேச சமூகத்திற்கும் தெரியப்படுத்திவிட்டது.

படையெடுத்து வந்து ஆக்கிரமித்து, தமிழர் வாழ்விடங்களில் நிலைகொண்டுள்ள படைத் துருப்புக்களை உடனடியாக மீளப்பெற்று, அரசியல் வழிமுறைகளில் தீர்வுகாண்பதற்கான பேச்சுவார்த்தைகளைப் புலிகளுடன் ஆரம்பிக்குமாறு கோரி – தமிழ் மக்கள் தமது சுய அபிப்பிராயத்தைப் பகிரங்கமாகக் கூறியும்விட்டனர். 'சூரியப் பிரகாசம்' படையெடுப்பின் பின்பு நடாத்தப்பட்டது என்ற வகையில், இந்த மாபெரும் மனிதச் சங்கிலிப் போராட்டம முக்கியத்துவம் பெற்றதாகின்றது.

''சமாதானத்திற்கான போர்'' என்ற சந்திரிகாவின் கோட்பாடு, தமிழர்களுக்கு வரலாறு காணாத நெருக்குதலைக் கொடுத்துவிட்டது; அவர்களது வாழ்வின்மீது சுமையைச் சுமத்திவிட்டது. இந்தத் துயர வரலாறானது, சந்திரிகா பற்றிய 'சமாதான'மாயையைத் தமிழ் மக்களின் மனங்களிலிருந்து கலைத்துவிட்டது. சந்திரிகா என்பவர் சிங்களப் பேரினவாதத்தின் தலைமைப் பொறுப்பை எடுத்துள்ள அதன் இன்றைய வாரிசு என்பதை, தமிழ் மக்கள் இப்போது தெளிவாக உணரத் தொடங்கிவிட்டார்கள். அதன் வெளிப்பாடாகவே, ''அடைப்புக்களிலிருந்து'' வெளிவந்த தமிழ் மக்கள் சந்திரிகாவுக்கு எதிரான தம் கொதிப்புணர்வை வீதிகளிலிறங்கிக் காட்டியுள்ளதுடன், ''மௌனம் கலைந்து'' தம் கருத்தையும் தெரிவித்து, ஆக்கிரமிப்புக் கோட்பாட்டை பகிரங்கமாக நிராகரித்தும்விட்டனர்.

அப்படியிருந்தும், சந்திரிகா அரசு இராணுவ வழிமுறைகளையே பின்பற்ற முனையுமாயின், சிறீலங்காவிலிருந்து பிரிந்துசென்று தனியாட்சி அமைப்பதைத் தவிர வேறு வழியில்லை என்ற முடிவு, தவிர்க்கமுடியாததாகிவிடும்! O

www.eelamview.com

# பெறுமதி அற்ற பெட்டகமும் சந்திரிகாவின் திட்டமும்

புன்சிரிப்பையும் உற்சாகமான தோற்றத்தையும் காட்டும் சந்திரிகா அம்மையாரின் புகைப்படங்களுக்குப் பதிலாக, கோபத்துடனும் எரிச்சலுடனும் தோன்றும் அவரது படங்களே பெரும்பாலும் இப்போது, கொழும்புப் பத்திரிகைகளில் வெளிவருகின்றன. அண்மையில் ஸ்ரார் தொலைக்காட்சியில் தோன்றி செவ்வி கொடுத்தபோதும் பின்னர், இந்து பத்திரிகைக்கு அவர் வழங்கிய நேர்காணலின் போதும் இனவெறி கக்கும் சொற்களை உதிர்த்துள்ளதுடன், கோபத்துடனும் காணப்பட்டார்.

அம்மையாரின் மனஉளைச்சலுக்கு பிரதானமாக இரண்டு காரணிகள் உண்டு. ஒன்று, வலிகாமம் சிங்களப் படைகளால் கைப்பற்றப்பட்டமை அம்மையாருக்கு உடனடி மகிழ்ச்சியைக் கொடுத்திருந்தாலும், எதிர்பார்த்தபடி அது இராணுவ - அரசியல் நன்மைகளை அரசாங்கத்திற்கு ஈட்டித் தரவில்லை என்ற விரக்தி. இரண்டாவது, அம்மையாரின் தீர்வுப்பொதி தமிழரின் அரசியல் சந்தையில் விலைபோகாதிருப்பதால், அவர் அடைந்துள்ள ஏமாற்றமும் - கோபமும் ஆகும்.

''புலிகள் இயக்கம் ஒழிந்தது'', ''போராட்டம் முடிந்தது'' என்ற நம்பிக்கைகள், யாழ்ப்பாண வெற்றிவிழாவைக் கொண்டாட அம்மையாரைத் தூண்டின. ''புலிகளின் பலத்தில் அறுபது வீதத்தை அழித்துவிட்டோம்'' என்ற ரத்வத்தவின் பிரகடனம் அதை நிரூபிக்கின்றது. ஆனால், 'யாழ்ப்பாண வெற்றி' சந்திரிகா அரசாங்கத்திற்கு அல்லது சிங்கள இனத்திற்கு என்ன நன்மையைத் தேடித் தந்துள்ளது என்ற கேள்வியை சிங்கள ஆய்வாளர் பலர் இப்போது எழுப்பத் தொடங்கியுள்ளனர். கொழும்பு போர்க்களமாக மாற்றப்பட்டதுதான் நடந்துள்ளது என்று, அவர்கள் அபிப்பிராயமும் கூறுகின்றனர். இதேவேளை, கிழக்கின் பெரும்பகுதி நிலத்தை புலிகளுக்குத் தாரை வார்த்துக் கொடுத்துவிட்டு குடாநாட்டின் ஒரு பகுதியான வலிகாம நிலத்தைக் கைப்பற்ற உத்தரவிட்ட அரசாங்கத்தின் செயல், ஒரு வெற்றியாகக் கொண்டாடப்படமுடியாதது; மாறாக, ஒட்டுமொத்த போர்முறைத் திட்டத்திற்குக் கிடைத்த தோல்வி என்றே ஐ.தே. கட்சி உட்பட சிங்கள அமைப்புக்கள் மற்றும் சில அரசியல் ஆய்வாளர்கள் அம்மையாரைக் குற்றம் சாட்டுகின்றனர்.

''புலிகளின் கதை முடிவுக்கு வருகின்றது'' என்ற கணிப்பீட்டில் பிறந்ததுவே அரசாங்கத்தின் தற்போதைய தீர்வுப்பொதி ஆகும். அதனாலேயே, இந்தத் தீர்வுததிட்டத்தில் தமிழினததின் அரசியல் அபிலாசைகளைப் பூர்த்திசெய்யக்கூடிய எந்த ஒரு விடயமும் சேர்க்கப்படவில்லை. தமிழர் தாயகத்தின் புவியியல் ஒருமைப்பாடோ - தமிழர் தேசிய தனித்துவம் பற்றிய அங்கீகாரமோ - தமிழரின் நில உரிமை பற்றிய நிலைப்பாடோ - தமிழரின் தன்னாட்சி உரிமைக்கான உறுதிப்பாடோ - இப்படியான அடிப்படைகள் எதுவுமே இந்தத் தீர்வுப்பொதியில் வரையறுக்கபபட்டிருக்கவில்லை.

வலிகாமம் மீதான ஆக்கிரமிப்பிற்குப் பின்னர் - எதைக் கொடுததாலும் அதை அப்படியே ஏற்றுக்கொள்ளும் மனநிலையுடன் தமிழ்மக்கள் இருக்கின்றனர் என்றதொரு கணிப்பீட்டைச் சந்திரிகா அரசாங்கம் வைத்திருக்கின்றது. அது காரணமாக, தமிழரின் அரசியல் சந்தையில் தனது தீர்வுப்பொதிக்கு அதிக விற்பனை வாய்ப்பு இருக்கும் என்ற நம்பிக்கை, அம்மையாருக்கு இருக்கிறது. தற்போதைய தீர்வுபபொதி வெளியிடப்பட முன்னர் - கடந்த ஆண்டு ஒக்ரோபரில் அம்மையார் பகிரங்கப்படுத்திய தீர்வு யோசனைகளில், முற்போக்கான அம்சங்கள் சில இருந்தன. ஆனால், அவற்றை எல்லாம் நீக்கிவிட்டு தற்போதைய அரைவேக்காட்டுத் திட்டத்தை வெளியிட, மேற்குறித்த கணிப்புக்கள் அம்மையாரைத் தூண்டின எனலாம்.

யாழ்ப்பாணச் சமராலும் - அதன் அனைத்து விளைவுகளாலும் தமிழ் மக்கள் பேரிடரைச் சந்திக்கின்றனர் என்பது மறுக்கமுடியாத உண்மை. அதேவேளை, அந்தப் பேரிடர் தமிழரின் தேசியப்பற்றைச் சிதைக்கவில்லை; மாறாக, விடுதலையின் அவசியத்தை தமிழ் இனத்திற்கு வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளது. வலிகாம ஆக்கிரமிப்பிற்குப் பின்னர் ஆயிரக்கணக்கான இளைஞர்கள் - யுவதிகள் புலிகளுடன் இணைந்துள்ளனர். வட - கிழக்கிற்கு வெளியே வாழும் தமிழர்களும், புலம்பெயர்ந்து வெளிநாடுகளில் வாழும் தமிழர்களும் தனிநாட்டின் தேவைபற்றி முன்னரை விட அதிகம் உணர்ந்துள்ளனர். சுருக்கமாகச் சொன்னால் வலிகாம ஆக்கிரமிப்பும் - தீவுமுழுவதும் அது தமிழ் மக்களுக்குக் கொடுத்த பாடங்களும் எமது மக்களிடம் அரசியல் விழிப்புணர்வை ஏற்படுத்தி உள்ளன என்பதை எவராலும் மறுக்க முடியாது. இழப்புக்கள் மற்றும் வாழ்வியல் துன்பங்களை அனுபவித்துக்கொண்டிருக்கும் இந்த நிலையிலும், சந்திரிகாவின் அரைகுறைத் தீர்வுத்திட்டத்தை தமிழ் மக்கள் நிராகரிப்பதற்கு, அந்த அரசியல் விழிபபுணர்வே பிரதான காரணமாகும்.

## சிங்கள மக்களும் தீர்வுப்பொதியும்

இது ஒருபுறமிருக்க, சந்திரிகா அம்மையாரின் தீர்வுப்பொதியை சிங்கள தேசத்தின் பெரும்பகுதியினர் ஏற்றுகொள்ளவில்லை. பிரதான எதிர்க்கட்சியான ஐ.தே. கட்சி மற்றும் பௌத்த மதபீடங்கள் உட்பட சிங்களக்கட்சிகள் - அமைப்புக்கள் அம்மையாரின் தீர்வுத்திட்டத்தை நிராகரிக்கின்றன. சந்திரிகாவின் சொந்தக் கட்சிக்குள்ளிருந்தும் தீர்வுப்பொதிக்கு எதிரான - ஒரு பலமான எதிர்ப்பு கிளம்பி வருவதும் குறிப்பிடத்தக்கது.

'யாழ்ப்பாண வெற்றி' சிங்களப் பேரினவாதிகளுக்கு ஒரு செய்தியைக் கொடுத்துள்ளது; அரசியல் வழிமுறைமூலம் தமிழரின் இனப்பிரச்சினைக்குத் தீர்வு காணவேண்டிய தேவை தற்போது இல்லை என்பதே, அந்தச் செய்தியாகும். இடைவிடாது இராணுவ பலத்தைப் பயன்படுத்தி - படையெடுப்புக்களுக்கு மேல் படையெடுப்புக்களைத் தொடர்ந்து நடாத்தி, தமிழரின் போராட்டத்தை போராட்ட சக்தியை பூண்டோடு ஒழித்துவிடவேண்டும் என்பதே, பேரினவாதிகளின் விருப்பம். இந்த விருப்பத்திற்கு தீர்வுப்பொதி தடையாக இருக்கின்றது என அவர்கள் கருதுகின்றனர். எனவேதான், தீர்வுப்பொதியை நடைமுறைப்படுத்தவிடாது தடுப்பதில் பேரினவாத சக்திகள் அக்கறை காட்டுகின்றன.

ஆனால் மறுபுறத்தில், போராட்டத்தை ஒடுக்க - புலிகளை அழிக்க - இந்தத் தீர்வுப்பொதி உதவும் என்பது சந்திரிகாவின் எதிர்பார்ப்பாகும். அரசியல் வழிமூலம் இனப்பிரச்சினைக்குத் தீர்வுகாண முயல்வது போலக் காட்டிக்கொண்டு, தீர்வுப்பொதி என்ற சூழ்ச்சிகர ஆயுதத்தால் தமிழர் →









தேசியத்தை அழிப்பது என்பது அம்மையாரின் தந்திரோபாயமாகும். இந்தத் தந்திரோபாயம் வெற்றி பெறாதுவிட்டால் அதற்கு ஒரு அரசியல் நியாயம் கற்பித்துவிட்டு, இராணுவ வழிமூலம் தமிழர் தேசியத்தைக் கொல்வது என்பது அவரது மாற்றுத் திட்டம். எனவே, சந்திரிகா அம்மையாரைப் பொறுத்த வரைக்கும் தீர்வுப்பொதியை அமுல்படுத்துவது என்பதும் அது தோல்வி காண்பது என்பதும் ஒன்றுதான். இந்த வகையில், தீர்வுப்பொதியை ஆதரிக்கும் சந்திரிகா அரசாங்கத்திற்கும் அதை எதிர்க்கும் சிங்களக் கட்சிகள் மற்றும் அமைப்புகளுக்கும் இடையே, அடிப்படையில் பிரதான ஒற்றுமை ஒன்று நிலவுகின்றது. அதாவது, தமிழரின் விடுதலைப் போராட்டம் அழிக்கப்படவேண்டும் என்பதே அதுவாகும். இராணுவ அணுகுமுறை மட்டும்தான் அதைச் சாதிக்க சிறந்தவழி என்பதுடன் தீர்வுப்பொதிகள், பேச்சுவார்த்தைகள் அதற்குத் தடையாக இருக்கின்றன என்பது, வெளிப்படையான இனவாத அமைப்புக்களின் நிலைப்பாடு. ஆனால், அரசியல் - இராணுவ அணுகுமுறைகளை தேவைக்கேற்றவாறு பயன்படுத்தி, தீர்வுத்திட்டங்கள் - பேச்சுவார்த்தைகள் - இராணுவ நடவடிக்கைகள் என்ற தந்திரோபாய நகர்வுகளூடாக தமிழரின் போராட்டத்தை ஒடுக்க முயல்வதே சிறந்த வழி என்பது, சந்திரிகா அரசாங்கத்தினதும் பேரினவாத புத்திஜீவிகளினதும் நிலைப்பாடாகும்.

சந்திரிகா அம்மையாரின் தீர்வுப்பொதி தொடர்பாக சிங்கள தேசத்தில் இன்று நடைபெற்றுக்கொண்டிருக்கின்ற விவாதம், பேரினவாதிகளுக்கும் முற்போக்காளர்களுக்கும் இடையே நடைபெறும் கருத்துப் போராட்டம் அல்ல; மாறாக, தமிழரின் விடுதலைப் போராட்டத்தை ஒடுக்குவது பற்றிய வழிவகைகள் தொடர்பாக, பேரினவாத சக்திகள் தங்களுக்குள் நடாத்தும் கருத்து மோதல்ல அதுவாகும். அதாவது, தீர்வுப்பொதி தொடர்பாக

*ஒற்றை ஆட்சிக்கு உட்பட்ட நிலையில், சாதாரண அதிகாரப் பரவலாக்கலையே ஏற்க மறுக்கும் அளவுக்கு சிங்களத்து அரசியலில் பேரினவாத உணர்வு மேலோங்கி இருப்பது, வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கு நிச்சயம் ஏமாற்றத்தைக் கொடுக்கும்.*

சந்திரிகா அம்மையார் தலைமையில் ஒருபகுதிப் பேரினவாதிகளும், ஐ. தே. கட்சி உட்பட பௌத்த மகா சங்கத்தினது தலைமையில் மறுபகுதிப் பேரினவாதிகளும், தமிழ்த் தேசியத்தின புதைகுழி பற்றி நடாத்தும் கருத்து மோதல்தான் தீர்வுப்பொதி தொடர்பாக சிங்கள தேசத்தில் நடககும் விவாதமாகும.

இலங்கையின் இனப்போருக்கு முடிவு கட்டப்படவேண்டும என்பது, இந்தயா உட்பட வெளிநாட்டு அரசாங்கங்கள் பலவற்றின் விருப்பமாகும். மனிதாபிமான காரணங்களுக்காக அல்லாது, பொருளாதாரம் - பிராந்திய நலன்கள் காரணமாக அவை அவ்விதம் விரும்புகின்றன. யாழ்ப்பாணத்தைக் கைப்பற்றுவதன்மூலம இனப்போருக்கு விரைவான முடிவைக் காணலாம் என்பது, சந்திரிகா - ரத்வத்த அரசாங்கத்தின் வாதமாக இருந்தது. அதை ஏற்றுக்கொண்டு வெளிநாடுகள் பலவும், யாழ்ப்பாணததைக் கைப்பற்றும் சந்திரிகா அரசாங்கததின் முயற்சிக்கு மறைமுக ஆதரவு வழங்கி இருந்தன. யாழ்ப்பாணம் கைப்பற்றப்பட்டது; ஆனால், அவை எதிர்பார்த்தது போல போர் முடிவுக்கு வரவில்லை; அதற்கு மாறாக போர் விரிவாக்கம் கண்டுவிட்டது. ஆயினும், பொருத்தமான ஒரு தீர்வுத் திட்டதை வெளியிடவேண்டும் எனறு சந்திரிகாவை வெளிநாடுகள் நிர்ப்பந்தித்தன. ஆனால், சந்திரிகா அம்மையார் வெளியிட்ட தீர்வுத்திட்டம ஒரு அடிமைச் சாசனத்தைப் போலவே இருக்கின்றது. பேரினவாதத்தின் அடிவருடிகளாகச் செயற்பட்டுவரும் தமிழ்க் குழுக்களே அதை ஏற்க முனவராத அளவுக்கு அம்மையாரின் தீர்வுப்பொதி மட்டரகமாக உள்ளது. ஆயினும், இதை ஒரு அடிப்படையாக வைத்து - பேச்சுக்களை நடாத்தி - ஒரு இணக்கத்திற்கு வந்து தீர்வுத்திட்டம் ஒன்றை உருவாக்க முடியும் என்று, சர்வதேச அரசுகள் நம்பின. தமிழ் மக்கள் தரப்பில் இருந்து இந்த தீர்வுப்பொதிக்கு ஆதரவு கிடைக்காதது சர்வதேசத்தால புரிந்துகொள்ளத்தக்கது. ஆனால், சிங்களவர் தரப்பில் இருந்து தீர்வுப்பொதிக்கு எதிர்ப்புக் கிளமபி இருப்பது, வெளிநாட்டு இராஜதந்திரிகளது கவனத்தை ஈர்த்துள்ளது. ஒற்றை ஆட்சிக்கு உட்பட்ட நிலையில், சாதாரண அதிகாரப் பரவலாக்கலையே ஏற்க மறுக்கும் அளவுக்கு சிங்களத்து அரசியலில் பேரினவாத உணர்வு மேலோங்கி இருப்பது, வெளிநாட்டு இராஜதந்திரிகளுக்கு நிச்சயம்

ஏமாற்றத்தைக் கொடுக்கும். தமிழினத்தின் அடிமைச் சாசனம் போல் உள்ள இந்தத் தீர்வுப்பொதி சிங்களவர்களால் நிராகரிக்கப்படும்போது, தமிழரின் இனப் பிரச்சினைக்குத் தீர்வாக சிங்கள தேசம் இனிமேல் எதை வழங்கப்போகின்றது என்ற கேள்வி, வெளிநாட்டு இராஜதந்திரிகள் மத்தியில் கட்டாயம எழும். அப்படி ஒரு சங்கட நிலை தோன்று முன்னர், தீர்வுத்திட்டத்தை நடைமுறைப்படுத்த அம்மையார் விரும்புகின்றார்.

தனது (சிங்கள) மக்களிடமிருந்து தீர்வுத்திட்டததிற்கு ஆதரவு தேட அம்மையாரால் முடியாது; அவ்விதம் ஆதரவு தேடுவது அம்மையாரின் நோக்கமும் அலல. இந்தத் தீர்வுப்பொதியின் தலைவிதியை தமிழர்களே தீர்மானிக்கட்டும் என்று விட்டுவிடுவதே சந்திரிகாவின் திட்டமாக உள்ளது. தமிழ் மக்களிடம் இருந்து ஆதரவு கோருவது - அவர்கள் ஆதரிக்கத் தவறினால் போரைத் தீவிரப்படுத்திவிட்டு அதற்கான பழியைத் தமிழர்களது தலையில் போடுவதே, அம்மையாரின் திட்டம். அதனாலேதான் ''தீர்வுப்பொதி தொடர்பாக தமிழர்கள் மௌனம் சாதிக்கின்றனர்'' என்று தமிழ் மக்களைக் கண்டித்ததுடன், ''விளைவுகள் பாரதூரமாக இருக்கும்'' என்று தமிழ் மக்களை அவா மிரட்டியுமுள்ளார். இதேவேளை, தமிழ்க் குழுக்களையும் அதன் தலைவர்களையும் இதற்காகச் சந்திரிகா அம்மையார் சாடியுள்ளார். இந்தத் தமிழ்க் குழுக்கள் தீர்வுத்திட்டததை ஆதரித்தாலும் அதை நடைமுறைப்படுத்த முடியாது என்பதும் அரசாங்கத்திற்குத் தெரியும். அப்படியிருந்தும் தமிழினததின் மீதான ஒட்டுமொதத வெறுப்பை, தமிழின விரோதிகளான தமிழ்க் குழுக்கள் மீதும் அம்மையார் காட்டியுள்ளார்.

தமிழ் அரசியல்வாதிகளை தேவைக்கேற்பப் பயன்படுத்திவிட்டுத் தூக்கியெறிவது பேரினவாதுகளின் வழமை.

சேர். பொன்னம்பலம் இராமநாதன் காலத்தில் இருந்து இன்றுவரையும், பேரினவாதிகள் அதைச் சிறபபாகச் செய்து வருகின்றனர். சுயநலவாதிகளையும் - ஏமாளி அரசியலவாதிகளையும் தனது கைக்குள் போட்டுக்கொண்டு தமிழர் தேசியததிற்கு எதிராகத் தமிழர்களையே பேசவைககும கைங்கரியத்தை, பேரினவாத ஆட்சியாளர்கள் நுட்பமாகச் செய்து வருகின்றனர். இன்றுங்கூட, சாவதேசரீதியில் தமிழரின் விடுதலைப் போராட்டத்திற்கு எதிரான பரசசாரப் படையாக தமிழாகளே விளங்கிவரும் அவலததை நாம் காணமுடியும். இததகைய தமிழின விரோதிகளை தமிழினத்தின் அரசியல பிரதிநிதிகள்போல் காட்டுவதிலும் சிங்கள அரசாங்கங்கள் அதிக அக்கறையைக் காட்டும். தமிழினத்திற்கு எதிராகப் பேசும்போதும் - செயற்படும்போதும் இவர்களைப் புகழ்ந்துரைத்து, பேரினவாதிகள் துதிபாடுவார்கள். ஆனால், பேரினவாத நடவடிக்கைகளுக்கு ஒத்துழைக்க மறுக்கும் போது, படுமோசமாக வசைபாடி இவர்களைப் பேரினவாதகள் தூற்றுவர், தமிழ்க் குழுக்களுக்கும் - அதன் தலைவர்களுக்கும் இப்போது அதுதான் நடக்கின்றது.

தமிழ் இனத்திற்கு எதிராகவும் - தமிழர் படுகொலைகளுக்கு அனுசரணையாகவும் இருந்துவரும இந்தத் தமிழ்க் குழுக்கள், தமது சொந்த மக்களால் துரோகிப் பட்டமும் - பேரினவாதகளால் முட்டாள் பட்டமும் சூட்டப்படுகின்றனர். இன்னும் சற்று நாட்களில் இந்தத் தமிழ்க் குழுக்கள்

பேரினவாதிகளின் கால்களில் விழுந்துவிடுவார்கள்; அப்போது, பேரினவாத சக்திகள் இவர்களைப் புகழ்ந்து பேசும். ஆனால் என்றோ ஒரு நாள் தமிழ்க் குழுக்களின் தேவை காலாவதியான பின்னர், பேரினவாதிகள் இவர்களை, நட்டாற்றில் கைக்ழுவி விடுவர் என்பது ஒரு தீர்க்கதரிசனமாகவே இருக்கும்.

தமிழரின் இனப்பிரச்சினை சம்பந்தபபட்ட அரசியல் நிலைப்பாடுகள் தொடர்பாக, அதிகாரத்தில் இல்லாதபோது முற்போக்கான கருத்துக்களைப பகிரங்கமாகத் தெரிவிக்கும் சிங்களத் தலைவர்கள், அதிகாரத்திற்கு வந்தவுடன் முற்போக்கு முகமூடிகளைக் கழற்றிவைத்துவிட்டுப் பேரினவாத உணர்வுடன் நடந்துகொள்வது, சிறீலங்கா அரசியலில் இன்னொரு வழமை.

தன்னாட்சியுரிமை தமிழினத்திற்கு உண்டு என்றும், சமஷ்டி ஆட்சி அமைப்புதான் இலஙகைத தீவிற்குப் பொருத்தமானது என்றும் ஆயிரத்து தொள்ளாயிரத்து இருபதுகளில் கூறிவந்த எஸ். டபிள்யூ. ஆர். டி. பண்டாரநாயக்காதான் 'சிங்களம் மட்டும' சட்டத்தை நாடாளுமன்றில் நிறைவேற்றி தமிழினத்திற்கெதிரான இனவாத அரசியலைத் தீவிரப்படுத்தினார்.

'சிங்களம் மட்டும்' சட்டம் நாடாளுமன்றில் விவாதத்திற்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது, '' இருமொழி ஒரு நாடு; ஒருமொழி இருநாடு '' எனறு தத்துவம பேசிய கொல்வின் ஆர். டி. சில்வா, 1970இல் அதிகாரத்திற்கு வந்தபோது, அரசியல் யாபபில் தமிழ் மக்களுக்கு இருந்த எஞ்சிய ஒரு பாதுகாப்பையும் நீக்கும் வகையில், அரசியல் யாப்பைப் புதுப்பித்தார்: அதேவேளை, தமிழ் மாணவர்களுக்கு எதிரான 'தரப்படுத்தல்' என்ற இனவாதச் சட்டத்தையும் ஆதரிததார்.

இந்த அரசியல் வழமையை சந்திரிகா அம்மையாரும கடைப்பிடிததுள்ளார். ஆட்சிக்கு வருவதற்கு முன், தமிழரின் இனப்பிரச்சினைககான தீர்வு தொடர்பாக முற்போக்கான கருத்துக்களை உறுதி மொழிகளாக வழங்கிய அவர், ஆட்சிபீடம் ஏறியதும் தனது பேரினவாத சுயரூபததைக் காட்டத் தொடங்கினார். இலங்கைத்தீவின் வரலாற்றில் எந்த ஒரு பேரினவாதத் தலைவனும் தமிழினத்திறகுச் செயயாத அழிவை சந்திரிகா அம்மையார் செய்து வருகினறார்.

இப்போது, தனது தீர்வுத்திட்டத்தை எங்ஙனம் நடைமுறைப்படுத்து அமைபபது என்று அம்மையார் ஆராய்சசி செய்யவில்லை; அடுதத படையெடுப்பை எவ்விதம் நடாததுவது - அதற்கேறற வகையில் முன்னேற்பாடுகளை எப்படிச் செய்வது என்பது பற்றியே கவனம செலுத்து வருகினறார்.

தீர்வுத்திட்டத்திலுள்ள குறைபாடுகள் தொடாபாக தமிழ் மக்களிடம் இருக்கும்



அதிருப்தியை, அடுத்த படையெடுப்புமூலம் நீக்கிவிட முடியும் என்ற அம்மையார் சிந்திக்கின்றார; அடுத்த படையெடுப்பால் தமிழ் மக்கள் படப்போகும் அவலங்கள் - அழிவுகள் என்பன, தற்போதைய தீர்வுப் பொதியைச் சிறந்ததொரு தீர்வுத்திட்டமாகத் தமிழர்களுக்குக் காட்டும் என்று அம்மையார் நம்புகின்றார். அண்மையில் சர்ச்சையைக் கிளப்பிய இரண்டு நேர்காணல்களிலும் அம்மையார் தெரிவித்த கருத்துக்களின் சாராம்சம்: 'இனப்பிரச்சினைக்கு இராணுவ வழிமுறைமூலமான தீர்வே சாத்தியம்' என்பதே ஆகும்! O

www.eelamview.com

# நேற்றெம் பூமிக்கு நெருப்பிட்டவனே காற்றிப்போ எம் பக்கம்!

தென்தமிழீழத்தின் எழுவான்திசை
செந்நிறமானது.
உதயத்தின் பூபாளம்
நீராமகளிரின் வாய்மொழியானது.
நீண்டகாலம் அழுதவிழிகளில்
சந்தோஷப் பூமலர்ந்தது.
எம்பிள்ளைகளாலும் இயலுமென
முகங்களின்று முறுவலிக்கின்றன.
அடிக்கடி ஓடியகால்கள்
தரித்து வேர்பிடித்துக் கொண்டன.
அன்னை பூபதி அவதரித்த மண்ணுக்கு
கண்மலரும் காலமிது.
விடுதலைக்கு அதிக விலைகொடுத்தோர் வரிசையில்
முதலிலெம் பெயரின் முத்திரை இருக்கும்.
''பட்டுப்போனது மட்டக்களப்பென''
பகைவன் பாட்டே பாடினான்.
வாவியின் மீன்கள் கூட
வாயெடுத்துப் பாடாமல் ஓடியொழிந்தன.
பச்சை நிறமற்றுச் செத்துக்கிடந்தன வயல்கள்.
பாட்டும், கூத்துமாய் கிடந்த ஊர்மனை
பேச்சடங்கி ஊமையானது.
பால்வழிந்தோடிய பூமிக்குக் கால்தளர்ந்து
காற்றும் கைவிட்டுப் போக
அக்கினிநாளாச்சு நம்வாழ்வு.
எத்தனை வதைபட்டோம்.
துப்பாக்கிப் பேய்கள் ஊர்புகும்.
வெடிச்சத்தம் தூரக்கேட்கும் போதே
வெளியேறிவிடுவோம்.
திரும்பி வரும்போது
ஊர் சிதறிப்போயிருக்கும்.
அங்கொன்று இங்கொன்றாக
குண்டேறிய உறவுகள் விறைத்துக்கிடக்கும்.
எடுத்தெரித்துவிட்டு இருப்போம்.
மீண்டும்......
மீண்டும்......
படுவான்கரைக்கும் எழுவான் திசைக்குமாக
ஓடுவதும் திரும்புவதுமாக
எம் நாட்கள் கழிந்தன.
நாதியற்று நாங்கள் கூவிய குரல்கள்
நாலுதிசையிலும் எதிரொலிக்க
பாதியிரவில் புகுந்து
கூந்தல் பற்றிக் குதித்தவனே!
வாடா வெளியே.




- வியாசன்

சொல்லியழ யாருமற்றுத் துடித்தபோது
கொள்ளிவைத்துப் போனவனே!
வெள்ளைக் கொடிபிடித்து
வீதிக்கு வா என்றவனே!
கண்ணீரும் சோறுமாய் கழிந்த நாட்களை
எண்ணி நிமிர்ந்தோம் இன்று.
நேற்றெம் பூமிக்கு நெருப்பிட்டவனே!
காற்றிப்போ எம்பக்கம்
காட்டுக்கு ஓடென்று கலைத்தவனே!
அண்ணாந்து பார்க்கும் அழகோடு
நெடுமுடி வேந்தராய்
எம்பிள்ளைகள் ஊருள்ளே வந்துளர்.
வெற்றிச் செய்தியுடன் வீடுவருகவென
கட்டி முத்தமிட்டு அனுப்பியுள்ளோம்.
விண்ணிறங்கும் தேவராய்
எண்ணிலடங்காத எம் எரிதழல்கள்
அயலெங்கும் அணிவகுத்துள்ளனர்.
இனிக் கலிவீழ்ந்து போகுமென
காற்று காதிலுரைத்தது.

பிள்ளைக் கறிசமைத்த பிடாரனே!
பிள்ளைகள் ஊர்புகுந்தனர்.
உன் கொள்ளைத்தாபாரின்
கொடிமுறிந்து போனது.
வெள்ளைக் கொடிபிடித்து வெளியே வருக.
நாயாய் கழிந்த நம்வாழ்வை
தாயான தலைவன் தலையுயரச் செய்தான்.
பிரபாகரனின் நெற்றிக்கண் பொறிகள்
நிமிரச் செய்தன.
குஞ்சுகள் கூடுவிட்டுப் போனபோது
உறவுதறிப் போனதாய் அழுதோம்.
இறக்கை முளைக்காத எம் குஞ்சுகள்
இன்று பறக்கக் கற்றுத் திரும்பின.
பார்த்ததும் பட்டதுயரெலாம் பஞ்சானது.
வேர்த்துக் கிடந்த வேர்களுக்கு
நீர்த்துளியிட்டன உறவுகள்.
பால்வார்த்தது பரம்பரை.
வலிகாம வேர்களை அகழ்ந்தெடுத்து
உதிரக்கொடிகளை தெருவில் எறிந்தவரே!
நிலாவரைக்கிணற்றுக்கா நெருப்புமூட்ட நினைத்தீர்?
அட பரிதாபத்துக்குரியவரே!
அங்கிங்கெனாதபடி எங்கும் அடிவாங்கி
தங்கியிருக்க இடமின்றித் தவிப்பீர்,
ஓரிரவில ஊரிழந்துபோனாரெம் உறவுகள்
உண்மைதான்.
வேரிழந்து அந்தரத்திலாடும் கொடிபோல
பொன்னுலகில் வாழும் பொசிப்பிழந்து போனாரவர்.
பொய்யில்லை.
என்ன பெரிய வாழ்வுக்கதிபதிகளாக இருந்தார்கள்
எல்லாம் இழந்து விட்டார்.
இன்று கட்டியகச்சையும் திருவோடுமாக
தெருவில் நிற்கின்றார்.
எத்தனை தலைமுறை கண்டதவர் வீடு
பெட்டகத்துள்ளே பேரனின் கைத்தடியும்
பித்தளைக் குத்துவிளக்கும்
அவர் அடிநீரின் ஆழம் சொல்லும்,
சென்றதுகளுக்கெங்கே இது விளங்கும்
ஊரைக் கொளுத்தி உலையிற்போடும்
ஏவற்பேய்கள் கூரையைப் பிரித்து
காவலரணுக்குக் கட்டும்.
முந்தையர் படுத்துறங்கிய கட்டிலைக் கொத்தி
அடுப்பெரிக்கும்.
குங்குமச்சிமிழை எடுத்துக் கொட்டும்.
விபூதித் தட்டை வீசும்.
விரதச்சட்டியைப் போட்டுடைக்கும்;
'செபமாலை'யையும்
தூரக்கேட்கும் ஆராதனை மணியையும்
தூக்கியெறியும்.
'பாவ சங்கீர்த்தனத் தட்டி'யால்
வேலி அடைக்கும்.
பேய்களுக்கு இவைகளின் பெருமை தெரியாது.
கத்தும்
கூத்தாடும்
முற்றத்தில் நின்று மூத்திரம் பெய்யும்.
பகிரங்கப் பிரகடனமொன்று
வடதமிழீழத்தை வாட்டநினைத்தால்...
தென்தமிழீழம் சினந்தெழுந்து
அதிரடிப் படையின் கதைமுடிக்கும்.
பாசறையெங்கும் தீயெழும்.
அச்சமில்லாது பகையுலவ
துண்டு நிலம்கூட இல்லாது குண்டுகள் வெடிக்கும்.
குனியும்வாழ்வு இனியும் கிடையாது.
வட்டியும் முதலுமாக
தென்தமிழீழம் கணக்கு முடிக்கிறது.
பகை தொலைந்து போக
புறம்பாடுகின்றது புலிகள் சேனை.
எம் ஊரின் போர்முரசே!
தாடிக்கவிஞனே!
உன்வரிகள் ஒவ்வொன்றும் உண்மையானது.
''தமிழன் கனவு'' நனவாகும் காலம்
விரைவில் விடியும்.
பரணியொன்றைப் பாடத் தொடங்கு!

www.eelamview.com

# பொருளியல் அடிமைகள்

இலங்கை வானொலியில் அடிக்கடி ஒலி பரப்பாகும் விளம்பரம் இது......

''இந்த அழகான வீட்டை நீங்கள் எவ்விதம் கட்டினீர்கள்'' என்று ஒரு ஆண் கேட்க,

''குவைத்தில் பணிப்பெண்ணாகப் பணி புரிந்து சம்பாதித்த பணத்தில் கட்டினேன்'' என்று, ஒரு இளம்பெண் பதிலளிக்கின்றார்.

இலங்கையிலிருந்து பணிப்பெண்களை மேற்கு ஆசிய (மத்திய கிழக்கு) நாடுகளுக்கு அனுப்பும் முகவர் நிலையம் ஒன்றின் விளம்பரம் அது.

விளம்பரத்தைப்போல, பணிப்பெண்கள் பணி புரியும் இடங்களில் அவர்களின் வாழ்க்கை இனிமையாகவும் - மகிழ்ச்சியாகவும் இல்லை.

சடந்த மாதம் கொழும்புப் பத்திரிகைகள் அனைத்தினதும் தலைப்புச் செய்தியாக இடம் பிடித்த தகவல் ஒன்று உண்டு.

'' குவைத்திலுள்ள சிறீலங்கா தூதரகத்தில், 250 இலங்கைப் பணிப்பெண்கள் தஞ்சமடைந்துள்ளனர்'' என்பதே அந்தத் தலைப்புச் செய்தி ஆகும்.

அரபு எசமானர்களின் அனைத்துவிதமான கொடுமைகளில் இருந்தும் தப்புவதற்காக, அந்த அப்பாவிப் பணிப்பெண்கள் எடுக்கும் தற்காப்பு முயற்சி அது. பெருந்தொகைப் பணிப்பெண்கள் இவ்விதம், தஞ்சமடைந்திருப்பது இது தான் முதற்தடவை. ஆனால், வீட்டு எசமானர்களின் வன்முறைகளில் இருந்து பாதுகாப்புத் தேடுவதற்காக இவ்விதம் பணிப்பெண்கள் தஞ்சமடைவது, மேற்கு ஆசிய நாடுகளில் உள்ள சிறீலங்கா தூதராலயங்களுக்குப் பழக்கமான ஒரு செயல்.

வீட்டு எசமானர்களின் பாலியல் வன்முறைகளுக்கும் மற்றும் உடல்ரீதியான தாக்குதல்களுக்கும் இந்தப் பணிப்பெண்கள் உள்ளாக்கப்படுவதுடன், இவர்களுக்கு உணவு கொடுக்க மறுக்கும் நிகழ்ச்சிகளும் ஆங்காங்கே நடைபெறுகின்றன. கொழும்பிலிருந்து வெளிவரும் ஒரு ஆங்கில வார ஏடு, எசமானனின் 'கோட்டை'க்குள் உணவுக்காகப் போராடிய ஒரு பணிப்பெண்ணின் அவல வாழ்வைச் சித்திரித்திருந்தது. எசமானரின் குடும்ப அங்கத்தவர்களுக்குத் தேவையான உணவைத் தயாரிக்கும் பணியில் ஈடுபடும் அந்தப் பணிப்பெண்ணுக்கு வேலை முடிந்ததும், அவருக்கான உணவை வழங்காது அவரின் விடுதிக்குக் கலைத்துவிடும் காட்டுமிராண்டித்தனம் பற்றி, அந்தப் பணிப்பெண் விபரித்திருந்தார்; பசிக் கொடுமையிலிருந்து தப்புவதற்காகத் தான் தயாரித்த உணவை, தானே தருடும் முறை பற்றி அந்த அபலைப் பெண் விளக்கியிருந்தார்; உணவு தயாரிக்கப்பட்டு முடிந்ததும், தனது உடைகளுக்குள் உணவை மறைத்தபடி தனது விடுதிக்குப் போய்ச்சேரும் அவலக் கதையை அந்தப் பணிப்பெண், பத்திரிகையாளரிடம விபரித்திருந்தார்.

அன்று ஒரு காலம் - நிலப்பிரபுக்கள் என்றும் அடிமைகள் என்றும் இருந்த காலம் அது.

பிரபுக்களின் வயல்களில் உணவு உற்பத்தியில் ஈடுபடும் அடிமைகளுக்கு உண்ண உணவிருக்காது.

உடை நெய்பவனுக்கு உடுக்க உடுப்பிருக்காது.

அதுபோல, உணவு சமைக்கும் தொழிலில் ஈடுபடும் 'நவீன அடிமை'களான பணிப்பெண்களுக்கு உண்ண உணவு கொடுக்கப்படுவதில்லை என்பது, இன்றைய யதார்த்தமாகும்!

இந்த அபலைப் பெண்கள் தொடர்பாக அல்லது இவர்களைப போன்ற பணிப்பெண்களது அவல வாழ்க்கை தொடர்பாக, சம்பந்தப்பட்ட அரசாங்கங்களோ அல்லது மனித உரிமை அமைப்புகளோ உருப்படியாக எதுவும் செய்யவில்லை. அதேவேளை, தமக்கு இழைக்கப்படும் கொடுமைகளுக்கு எதிராக நீதி கோரக்கூடிய அளவுக்கு, பணிப்பெண்களுக்கான சட்டப் பாதுகாப்பு அரபு நாடுகளில் இல்லை.

வறுமையும் - சமூகத்தின் நிராகரிப்புக்களும், பணிப்பெண்களாகப் பணிபுரிய பெண்களைத் தூண்டுகின்றன என்பது சமூகவியலாளர்களது கருத்து. பணிப்பெண் வேலைக்காக வெளிநாடு செல்லும் இலங்கைப் பெண்களுள் பெரும் பகுதியினா சிங்கள யுவதிகளாவா; இரண்டாம் இடத்தை முஸ்லிம் பெண்கள் வகிக்கின்றனர் குறித்ததொகை தமிழ்ப் பெண்களும் பணிப்பெண்களாக வேலைபார்க்கின்றனர்.

பணிப்பெண்களால் சிறீலங்கா அரசுக்கு வருடாந்தம் 150 கோடி ரூபாய்கள் அந்நியச் செலாவணியாக வந்து சேருகின்றன. இந்த அந்நியச் செலாவணியில் அக்கறைகாட்டும் சிறீலங்கா அரசு, அதனை ஈட்டிக்கொடுக்கும் பணிப்பெண்களின் அவல வாழ்வைக் கருத்தில் எடுக்காது இருக்கின்றது.

யார் எக்கேடு கெட்டாலும் பரவாயில்லை; அந்நியச் செலாவணி நாட்டுக்குள் வந்தால் போதும் என்ற மனநிலையுடன், சிறீலங்கா உட்பட அநேகமான மூன்றாம் மண்டல அரசுகள் இருக்கின்றன. அரசுகளின் இந்த மனநிலை காரணமாக விபச்சாரமும் சிறுவர்களைப் பாலியலுக்குப் பயன்படுத்தும் தொழிலும் அந்நியச் செலாவணியை ஈட்டித்தரும் லாபகரமான வாணிபமாக,மூன்றாம் மண்டல நாடுகளில் பெருகி வருகின்றன. சமூகச் சீர்கேட்டைக் கொண்டு வந்து எதிர்கால சந்ததியைப் பாழ்படுத்தும் கைங்கரியம் 'அந்நியச் செலாவணிச் சம்பாத்தியம்' என்ற பெயரில் நடைபெறுகின்றது. இதை அந்த அந்த நாடுகளின் அரசாங்கங்களும் மறைமுகமாக ஆதரிக்கின்றன என்பது, ஜீரணிக்கக் கடினமான ஒரு உண்மை.

சிங்கள தேசத்தின் கடற்கரைகளும் - உல்லாசப்பயண விடுதிகளும் இன்று, சிங்கள இனத்தின் பண்பாட்டையும் - அதன் எதிர்காலக் கௌரவத்தையும் நாசமாக்கும் இடங்களாக மாறிவருகின்றன என்று, சிங்கள சமூகவியலாளர்கள் அரசாங்கத்தை எச்சரிக்கின்றனர். பொருளாதார அபிவிருத்தி அடைந்துள்ளதாகப் பெருமை பேசப்படும் சில தென்கிழக்கு ஆசிய நாடுகளில், பாலியல் வாணிபத்திற்காகப் பெண்களும் - சிறுவர்களும் பொருளியல் அடிமைகளாகத் தொழிற்படுகின்றனர் என்பது மறுக்கமுடியாத உண்மை.

இந்த விவகாரங்களில், அரசியலுக்கு அப்பால் பொருளாதார சக்திகளே ஆதிக்கம் செலுத்துவதால், மனித உரிமை அமைப்புக்களின் அக்கறையை இவை ஈர்க்கவில்லை என்பது ஒரு மனித சோகம் ஆகும். O

## செய்தி ஆய்வு

# யாருக்கு வெற்றி:
## நரசிம்மராவா? அத்வானியா?

**543** தொகுதிகளைக்கொண்ட இந்திய நாடாளுமன்றிற்கான பொதுத்தேர்தல் ஏப்ரில் - 27 இலிருந்து மே 2 வரை நடைபெற உள்ளது. சுமார் 50 கோடி வாக்காளர்கள் இந்தத் தேர்தலில் பங்குபற்ற இருக்கின்றனர். இதில் 20 கோடிப் பேர் பெண்களாவர். இந்தப் பெண் வாக்காளர்களது தொகை ஐரோப்பாக் கண்டத்தின் ஒட்டுமொத்த சனத்தொகையைவிட அதிகமாகும்.

74 வயது நிரம்பிய நரசிம்மராவ் தலைமையிலான கொங்கிரஸ் கட்சிக்கும், 62 வயதான அத்வானி தலைமையிலான பாரதிய ஜனதாக் கட்சிக்கும் இடையேதான் அரசாங்கம் அமைப்பதற்கான போட்டி நிலவுகின்றது. ஆயினும், இடதுசாரிக் கட்சிகளது கூட்டணியும் மற்றும் பலம்மிக்க பிராந்தியக் கட்சிகளின் ஆதரவும்தான், யார் ஆட்சியை அமைப்பது என்பதைத் தீர்மானிக்கப்போகின்றன. ஏனெனில், இத்தடவை எந்த ஒரு தனிக்கட்சிக்கும் - அரசாங்கத்தை அமைப்பதற்குவேண்டிய - அறுதிப் பெரும்பான்மைப் பலம் கிட்டாது என்பது, இந்தியப் பத்திரிகைகளது கணிப்பாகும்,

'அவுட்லுக்' ( Outlook என்றொரு ஆங்கில சஞ்சிகை, நாடளாவிய ரீதியில் மாதிரிக் கணிப்பீடு ஒன்றை நடாத்தி முடித்துள்ளது. நகரங்கள் - கிராமங்கள் என்ற ரீதியிலும் தொழில்வாரியாகவும், பதினையாயிரத்திற்கு மேற்பட்ட ஆண்களையும் பெண்களையும் செவ்வி கண்டு, இந்தக் கருத்துக்கணிப்பை நடாத்தி உள்ளது. கொங்கிரஸ்( ஐ ) கட்சிக்கு 191 ஆசனங்கள் கிடைக்கும் வாய்ப்பு உண்டு என்பதும், பா. ஜ. கட்சிக்கு 170 ஆசனங்களும் இடதுசாரி முன்னணி மற்றும் இடதுசாரிக் கட்சிகளின் கூட்டணி என்பவற்றிற்கு 139 ஆசனங்களும் கிடைக்கலாம் என்பதும், 'அவுட்லுக்'கின் கணிப்பீடாகும்.

இதேவேளை, இந்தியாவின் பிரதமர் ஆவதற்கு யாருக்குத் தகுதி அதிகம் என்ற கேள்விக்கு, கருத்துக் கணிப்பீட்டில் பங்குகொண்டவர்கள் கூறிய பதிலின் அடிப்படையில், நரசிம்மராவுக்கு அந்தத் தகுதி உண்டென்று 29 வீதமானோர் கூறியுள்ளனர்; அத்வானிக்கே அந்தத் தகுதி உண்டென்று 27 வீதமானோர் தெரிவித்துள்ளனர்; சோனியா காந்திக்குத்தான் அந்தத் தகுதி உண்டென்று 15 வீதமானோர் கூறியுள்ளனர்.

பாரதிய ஜனதாக் கட்சி மக்கள் ஆதரவுள்ள கட்சி என்றாலுங்கூட, தென் மாநிலங்களில் இது மிகமிகக் குறைந்த மக்கள் ஆதரவையே கொண்டுள்ளது அதேவேளை, இதனது தீவிர மதசார்பு நடவடிக்கைகளினால் ஏனைய மதத்தைச் சேர்ந்த மக்களது ஆதரவு இந்தக் கட்சிக்கு இல்லை என்று, அரசியல் ஆய்வாளர்கள் அபிப்பிராயம் கூறியுள்ளனர். அத்துடன் சாதியத்தை நிலைநிறுத்த முயலும் ஒரு தீவிர பழைமைவாதக் கட்சி என்ற கருத்து இந்திய வாக்காளர் மத்தியில் இருப்பதால், சமூகரீதியாக ஒதுக்கப்பட்ட மக்களது ஆதரவும் இந்தக் கட்சிக்குக் கிடைக்க வாய்ப்பில்லை என்றும் அந்த ஆய்வாளர்கள் மேலும் தெரிவிக்கின்றனர்.

பா. ஜ. கட்சிக்கு இருக்கின்ற மேற்குறித்த பாதக அம்சங்கள் எதுவும் கொங்கிரஸ் [ ஐ ] கட்சிக்கு கிடையாது என்பது, பழுத்த கொங்கிரஸ்காரர்களது வாதம். கொள்கை அளவில் கொங்கிரஸ் கட்சி, மதசார்பின்மையைக் கடைப்பிடிக்கின்றது; அத்துடன், சாதிய - இன பேதங்களுக்கு அப்பால் இருக்கின்ற ஒரு காந்தியக் கட்சி என்றொரு அபிப்பிராயமும் இந்திய மக்களிடம் பொதுவாக உண்டு ஆயினும், நரசிம்மராவின் தலைமையிலான கொங்கிரஸ் கட்சியில்- அனைத்து மாநிலங்களிலும் - 'குழுவாதம்' வளர்ந்துள்ளதாக இந்தியப் பத்திரிகை ஒன்று சுட்டிக்காட்டியுள்ளது. இது கொங்கிரஸ் கட்சியின் வெற்றிவாய்ப்பைப் பெரிதும் பாதிக்கும் என்றே கருதப்படுகின்றது.

பிரதான எதிர்க்கட்சியான பா. ஜ. கட்சியை மடக்க 'ஹவாலா' என்கின்ற ஆயுதத்தைப் பயன்படுத்திய நரசிம்மராவ் இப்போது, அதே ஆயுதத்தால் ஆபத்தையும் எதிர்நோக்குகின்றார். அத்வானியை ஓரங்கட்ட தனது ஆறு அமைச்சர்களை ராவ், ஹவாலாவிற்கு பலி கொடுத்துள்ளமை தெரிந்ததே! ஆயினும், அந்த அமைச்சர்களுக்கு தேர்தலில் நிற்க அனுமதிச் சீட்டு வழங்குவதா இல்லையா என்கிற பிரச்சினை ராவிற்கு தலையிடியைக் கொடுத்துள்ளது. அனுமதிகொடுத்தால், நரசிம்மராவின் ஹவாலா குற்றச்சாட்டு கேலிக்கூத்தாகிவிடும்; அனுமதி கொடுக்காதுவிட்டால் கட்சி மேலும் பிளவுபடும். இது கட்சியின் வாக்கு வங்கியைப் பாதிக்கச் செய்யுமா இல்லையா என்பதை குறித்த அமைச்சர்களின் முடிவுகளே தீர்மானிக்கும்

இதேவேளை, ஜெயலலிதாவின் கட்சியுடன் தேர்தல்கூட்டு வைத்தால் அது கொங்கிரஸ் கட்சிக்கு நன்மை பயக்கும் என்று நரசிம்மராவ் நம்பி - முடிவெடுத்தார். ஆனால், அவரது முடிவு தமிழ்நாடு கொங்கிரஸ் கட்சியைப் பிளவுபடுத்திவிட்டது கிணறு வெட்ட பூதம் புறப்பட்டது போல, தேர்தல் கூட்டால் தமிழ்நாடு கொங்கிரசின் பிளவு நரசிம்மராவுக்குப் பலத்த அடியாக விழுந்துள்ளது என, டெல்லி விமர்சகர்கள் கூறியுள்ளனர்.

அ.இ அ.தி.மு.க - கொங்கிரஸ் கூட்டு அறிவிக்கப்பட்டதும், ஜெயலலிதாவின் கட்சியே மீண்டும் தமிழ்நாடு சட்டசபையைக் கைப்பற்றப் போகின்றது என்ற கருத்தைப் பலர் உறுதியாகக் கூறினர். ஆனால், இந்தக் கூட்டின் விளைவால் கொங்கிரஸ் சந்தித்த பிளவும், மூப்பனார் தலைமையிலான கொங்கிரஸ் கட்சி தி.மு கவுடன் கூட்டு வைத்துக்கொண்டமையும், இந்தக் கூட்டணிக்கு நடிகர் ரஜனிகாந்த் ஆதரவு தெரிவித்தமையும், சட்டசபை யாரின் கைக்குள் செல்லப் போகின்றது என்ற கேள்வியை எழுப்பிவிட்டுள்ளன.

பெரும்பாலான அரசியல் அவதானிகள் எதிர்வு கூறுவதுபோல, மத்தியில் ஆட்சிப் பொறுப்பைப் ஏற்பதற்கு ஒரு கட்சிக்கும் அறுதிப் பெரும்பான்மை பலம் கிடைக்காது போகுமானால், தேர்தலின் பின் இடம்பெறப்போகும் கட்சிகளின் கூட்டணிகளே, கொங்கிரஸ் கட்சியா அல்லது பா.ஜ. கட்சியா ஆட்சியை அமைக்கப்போகின்றது என்பதைத் தீர்மானிக்கப்போகின்றன. O

# கலையும் கவிதை!

காவற் கடமையில்
கண் விழித்திருக்கையில்
கவியொன்று உள்ளமதில்
கருக் கொள்ளும்.
கருக்கொண்ட கவிதனைக்
காகிதத்தில் வடிப்பதற்கு
எனதுள்ளம் துடிதுடிக்கும் - ஆனால்
காவல் உணர்வெனைத்
தடைசெய்ய......
கருத்தாக காவல் செய்வேன்;
காவல் முடிய கண்துயில்வேன்.
காலை புலரும் -
கடும்பயிற்சி தான் தொடரும்.
கருக்கொண்ட கவியெல்லாம்
கர்ப்பத்தில் கலையும்.

- க. கண்ணன் O

www.eelamview.com

# சிங்கள இனவாதத்திற்கு ஒரு மறுப்பு

(முற்றொடர்)

இலங்கை முதலில் தென்னிந்தியாவின் தொடர் நிலப்பரப்பாக இருந்துள்ளது என்பதை கல்லுருவவியல் ஆய்வுகள் நிரூபிக்கின்றன. காலகதியில் பாக்கு நீரிணையால் இலங்கை இந்தியாவிலிருந்து பிரிக்கப்பட்டு, ஒரு தீவாகியது. தீவாகு முன்பு தென்னிந்தியாவில் வாழ்ந்த அதே மக்கள் கூட்டமோ அல்லது தீவான பின்பு தென்னிந்தியாவில் இருந்து வந்து குடியேறிய மக்கள் கூட்டமோதான் இலங்கைத் தீவின் மனித வாழ்விற்கான மூலக்கூறாகும்.

எவ்வாறாயினும், தென்னிந்தியாவில் நிலவிய பெருங்கற் பண்பாட்டு மக்கள் கூட்டமும் பண்பாடும் போல, கி. மு. ஆயிரமாம் ஆண்டளவில் இலங்கையிலும் நிலவியது. பெருங்கற் பண்பாட்டைக் கொண்டிருந்த திராவிடப் பண்பாட்டு மக்களில் இருந்து தமிழ், தெலுங்கு, கன்னடம், மலையாளம, ஈழத்தமிழ், சிங்கள-பௌத்தம் எனும் பல கிளைப் பண்பாட்டுப் பிரிவுகள் தோன்றின. இவை காலகதியில் தனித்தனி தேசிய இனங்களாய் விருத்தியடைந்தன.

கிறீஸ்துவிற்கு முற்பட்ட சகாப்தத்தில், பெருங்கற் பண்பாட்டைக் கொண்ட திராவிடப் பண்பாட்டு மக்கள், இலங்கைத்தீவின் பல பாகங்களிலும் வாழ்ந்துவந்தனர். கி. மு. மூன்றாம் நூற்றாண்டளவில் தென்னிந்தியாவிற்கும் இலங்கைக்கும் பௌத்தம் அரசவை மதமாகப் பரவத் தொடங்கியது. தேரவாத பௌத்தம், மகாயான பௌத்தம் எனப பௌத்தத்தில் பெரும் பிளவு இந்தியாவில் ஏற்பட்டு, தென்னிந்தியாவிற்கு ஊடாக அப்பிளவு இலங்கைக்கும் பரவத் தொடங்கியது. தென்னிந்தியத் தமிழ்ப் பிக்குவினால், மன்னன் மகாசேனன் மகாயான பிரிவிற்கு மாற்றப்படக் கூடிய அளவிற்கு, மகாயானம் செல்வாக்குச் செலுத்தத் தொடங்கியது. இதற்கிடையில் பௌத்தம் தென்னிந்தியாவில் முற்றிலும் அருகத் தொடங்கியது. தென்னிந்தியாவிற்கு அருகே இருந்த இலங்கையின் வடபகுதியிலும் பௌத்தம் அருகியது; ஆனால், வடமத்திக்கு அப்பால் பௌத்தத்தைப் பேணிக்காக்க மகாசங்கம் உறுதிபூண்டு செயற்பட்டது. வடமத்திக்கு அப்பால் சூழல் காரணமாகவும் பௌத்தம், பாளி, வடமொழி ஆகியவற்றின் நெருங்கிய தொடர்பு காரணமாகவும் பெருங்கற் பண்பாட்டு மக்கள் கூட்டத்தின் மத்தியில் சிங்களம் எனும் மொழி கிளைவிட்டது. இலங்கைத்தீவின் பெருங்கற் பண்பாட்டு மக்களில் மறு தொகுதியினரிடையில், வட இந்திய பிராமணிய மதம் செல்வாக்குப் பெற்றது. ஒரே பொதுப் பண்பாட்டைக் கொண்டிருந்த ஒரே மக்கள் கூட்டத்தின் மீது இரு மதப் பிரிவுகளும், வேறுபட்ட புவியியல் மற்றும் அரசியற் காரணிகளும் செல்வாக்குச் செலுத்தியதன் தொடர் விளைவாக ஈழத் தமிழ், சிங்களம் எனும் இரு தனித்துவமான பண்பாட்டினங்கள் உருப்பெற நேர்ந்தது. இப்போதைய வளர்ச்சி நிலையில், இப்பிரச்சினையினை வெறும் மதக் கண்ணோட்டத்துடன் பாராது மானிடவியற் கண்ணோட்டத்திலேயே புரிந்துகொள்ள வேண்டும். அவ்வாறு புரியுமிடத்து, இவற்றினை மானிடவியல் அடிப்படையில் தனிப் பண்பாட்டினங்களாக அங்கீகரிக்க வேண்டும.

*தேசியவாதம் எனும் நவீன பதத்திற்கு சிங்களத்தில் பிரயோகிக்கப்படும் பதம் ''ஜாதிவாதய'' என்பதாகும். சிங்களத்தில் ''ஜாதிவாதய'' என்ற பதத்திற்கு இருக்கும் வரலாற்று - கலாசாரப் பொருள் என்னவெனில், சிங்கள இனவாதம் என்பதேயாகும்; அதாவது ஓரினத்தன்மை வாதமாகும்.*

தென்னிந்தியாவிற்கூடாக மகாயான பௌத்தம் இலங்கைக்கு வந்தது போல, பின்பு தென்னிந்தியாவில் பௌத்தம் முற்றிலும் அருகியமையால் அவ்வாறே தென்னிந்தியாவிற்கூடாக இலங்கையிலும் பௌதத்ம் அருகிவிடும் என்ற அச்சம இலங்கை மகாசங்கத்தவர்களிடம் ஏற்படவே, பௌத்தத்தைக் காப்பாற்றுவதற்கான ஓர் அரணாக தென்னிந்திய எதிர்ப்பு, தமிழின எதிர்ப்பு எனும் சித்தாந்தத்தை மகாசங்கத்தினர் உருவாக்கினர். அரசர்களுக்கும் இது சாதகமாய் இருந்ததால், அரசர்களும் மகாசங்கத்தினரும் இதில் ஒன்றுகலந்தனர். மகாயான - தேரவாத பிரச்சினையிலிருந்த இத்தகைய பிளவு, தெளிவான ஒரு எல்லைக் கோட்டை உருவாக்கத் துணை புரிந்தது. தற்போது இலங்கையில் தேரவாத பௌத்தம் நிலவுவதாகப் பெயரளவிற்குச் சொல்லிக் கொண்டாலும், நடைமுறையில் மகாயான பௌத்தமே நிலவுகின்றது.

சிங்கள மக்களும் தமிழ் மக்களும் இனப் பண்பாட்டு அர்த்தத்தில் ஒரே மூலக்கூறைக் கொண்டவர்கள். சிங்கள மக்களிடம் பெருங்கற் பண்பாட்டின் ஆழமான தொடர்ச்சியை இன்றும் தெளிவாகக் காணலாம். கிராமிய வழிபாட்டு முறைகள், சிறுதெய்வ வழிபாடுகள், 'கப்புறாள' முறை, கண்ணகி வழிபாடு, மற்றும் வாழ்க்கைமுறை என்பவற்றிலெல்லாம் இத்தகைய பெருங்கற் பண்பாட்டின் தொடர்ச்சிகளைக் காணலாம். கணநாத் ஒபயசேகரா எழுதிய Padhini Cult எனும் நூலில் இவற்றிற்கான சான்றுகளை அவதானிக்கலாம்.

சிங்கள மக்கள் மத்தியில் உள்ள 'கப்புறாள' போல தமிழில் பிராமணரல்லாத பூசகர் உண்டு. துவாய் கட்டிப் பூசை செய்தல் இதில் ஒரு சிறப்பான உதாரணமாகும். இத்தகைய பூசகர் முறையும், பூசை - படையல் முறையும் பெருங்கற் பண்பாட்டின் தொடர்ச்சியாகும். பெருங்கற் பண்பாட்டில் நிலவிய சிறப்பான தோல் வாத்தியமான 'பறை' வாசித்தல், தமிழில் இன்னும் கிராமியக் கோவில்களில் உண்டு. ஆனால், நகர்ப்புறங்களில் இது அருகிவிட்டது. அதேவேளை, சிங்கள மக்கள் மத்தியில் இத்தகைய பறைதான் மெருகுபெற்று, கிராமத்திலிருந்து அரசவைபவங்கள் வரை வாசிக்கப்படும் கருவியாய் உள்ளது. சிங்கள மக்களின் கிராமிய வாழ்விலும் கிரிகைகளிலும் பெருங்கற் பண்பாட்டின் தொடர்ச்சிகளை நிறையவே காணலாம்.

இலங்கை தென்னிந்தியாவிற்கு மிக அருகில் ஒரு சிறு கடலால் மட்டும் பிரிக்கப்படுவதால், அக்கடலைக் கடந்து, காலத்திற்குக் காலம் தென்னிந்தியாவில் இருந்து அரசியல், மதம் மற்றும் பண்பாட்டுத் தாக்கங்களும் அவ்வப்போது மக்கள் வரவுகளும் ஏற்பட்டு வந்துள்ளன. இவ்வாறாக காலத்திற்குக் காலம் தென்னிந்தியாவிலிருந்து வந்து குடியேறும் வர்த்தகர்களும், படையெடுப்பாளரும், புலப்பெயர்ச்சியாளர்களும் தாம் குடியேறும் இடங்களிற்கேற்ப, அதாவது; தமிழ்ப் பகுதிகளில் குடியேறுவோர் தமிழராயும், சிங்களப் பகுதிகளில் குடியேறுவோர் சிங்களவராயும் மாறிக்கொண்டனர். இன்று சிங்கள மக்கள் மத்தியில் நிலவும் ''கறாவ'', ''துறாவ'', ''சலாகம'' ஆகிய சாதிப் பிரிவினர் கி. பி. 14 ஆம், 15ஆம் நூற்றாண்டுகளில் தென்னிந்தியாவிலிருந்து வந்து குடியேறிச் சிங்களவராய் மாறிய மக்களே என்று, வரலாற்றாய்வாளரான மைக்கல் றொபேட்ஸ் கூறுகின்றார். இவ்வாறே நீர்கொழும்பில் வாழும் சிங்களவர், கண்ணுக்கு எட்டிய காலத்தில் சிங்களவராய் மாறிய தமிழராவர். சிங்களவர் பிரத்தியேகமான இனமென்பதையோ, தமிழர் மீதான சிங்களவரின் இன வன்மத்தையோ நிராகரிக்க இந்த வரலாற்றுண்மை உதவும். பழைய மகாயான - தேரவாத பிரச்சினைகளுக்கூடாக இன்றைய நவீன தமிழரைச் சிங்களவர் அணுகக் கூடாது. ஈழத் தமிழர் இற்றைக்கு 3000 ஆண்டுகளுக்கும் மேலான தொடர்ச்சியான பண்பாட்டு வேரை ஈழமண்ணில் கொண்டுள்ளனர் என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும். சிங்களவருக்கு எப்படி இலங்கைத்தீவின் ஒருபகுதி சொந்தமோ, அப்படியே தமிழருக்கும் இலங்கைத்தீவின் ஒருபகுதி சொந்தமாகும்.

மு. திருநாவுக்கரசு

சிங்கள - பௌத்தத்திற்கு தமிழரால் அச்சுறுத்தல் என்று சிங்கள பௌத்தவாதிகள் கூறுவதற்குப் பதிலாக பௌத்தம், பாளி, சமஸ்கிருதம் ஆகியவற்றின் கூட்டுச்சேர்வால் ஒருபகுதி தமிழர் சிங்கள பௌத்தராய் மாறிவிட்டனர் என்றும், எனவே மூலத் தமிழ் மக்களை பௌத்தம், பாளி, சமஸ்கிருதம் என்பன ஆக்கிரமித்ததன் விளைவே இன்றைய சிங்கள - பௌத்தம் என்றும் கூறிக்கவலைப்படும், திராவிடவாதக் கண்ணோட்டம் கொண்டோரும் உளர்.

தென்னிந்தியாவிலிருந்து வந்த மன்னர்களின் படையெடுப்புக்களை வைத்துக்கொண்டு ஈழத் தமிழருக்கு எதிரான வாதங்களை முன்வைப்பது, முற்றிலும் தவறானது. பண்டைய வரலாற்றில் ஒரு மன்னனுக்கு எதிராக இன்னொரு மன்னன் படையெடுப்பது இயல்பு. அதில் தமிழர் - சிங்களவர் என்றோ, இந்து-பௌத்தர் என்றோ, அண்ணன் -தம்பி என்றோ வேறுபாடில்லை. தமிழ் மன்னர்களான சேர, சோழ, பாண்டியர்கள் ஒருவருக்கு எதிராக இன்னொருவர் படையெடுத்தனர். சகோதரர்களான சிங்கள மன்னர்களிற் பலர், ஒருவருக்கு எதிராக இன்னொருவர் படையெடுத்தனர். உண்மை இவ்வாறிருக்கையில், தென்னிந்திய தமிழ் மன்னர்களின் பழைய படையெடுப்புக்களை வைத்துக்கொண்டு ஈழத் தமிழ் மக்களை எதிரிகளாக வர்ணிப்பது தவறு.

கி. பி. 10ஆம் நூற்றாண்டில் நிகழ்ந்த சோழப் படையெடுப்பு, சிங்கள - பௌத்த இராஜதானியை அனுராதபுரத்தில் இருந்து பொலநறுவைக்கு மாற்றியது உண்மை. ஆனால் அப்படையெடுப்பானது, வடக்கில் கந்தரோடையைத் தலைநகராகக்கொண்டு எழுந்த கதிரமலை அரசை அப்படியே கபளீகரம் செய்து கொண்டது. இங்கு சிங்களவரைப் பொறுத்தவரையில் சோழப் படையெடுப்பால் தலைநகரம் இடம் மாறியதுதான் நிகழ்ந்தது; ஆனால் தமிழரைப் பொறுத்தவரையில், அவர்களது அரசே சோழரால் விழுங்கப்பட்டுவிட்டது. எனவே, என்றோ யாரோ மேற்கொண்ட படையெடுப்புக்களுக்காக இன்று, ஈழத் தமிழரின் உரிமைகளைச் சிங்களவர் மறுப்பது மிகவும் அநீதியானது.

ஈழத் தமிழர் வந்தேறு குடிகள், படையெடுப்பாளர், அந்நியர் என்று சிங்களவரால் முன்வைக்கப்படும் வாதத்திற்கு வேறொரு இலகுவான பதிலையும் நோக்கலாம். மேற்



பேரினவாதத் திமிர்

கூறப்பட்டவாறுதான் தமிழர் இலங்கைக்கு வந்தனர் என்பதை வாதத்திற்காக ஏற்றுக் கொள்வோம். அப்படியான தமிழர் கி.பி. 13ஆம் நூற்றாண்டிலிருந்து அரசமைத்து ( யாழ்ப்பாண இராச்சியம் ) வாழ்ந்து வந்துள்ளனர். நவீன நிலைமையை உலகளாவிய ரீதியிற் பார்க்கும் போது, இடையிற் குடியேறிய மக்கள் கூட்டங்கள் பல அரசமைத்து, தேசிய இனங்களாயும் தேசிய அரசுகளாயும் வாழ்வதைக் காணலாம்.

கி. பி. 8ஆம் நூற்றாண்டின் பின்பு, மேற்காசியாவிலிருந்து இந்திய உபகண்டத்துள் படையெடுப்பாளராய் வந்து குடியேறிய இஸ்லாமியர் இன்று, பாகிஸ்தான் எனும் புதியதோர் அரசமைத்து வாழ்வதைக் காணலாம். அதே போல, கி. பி. 15 ஆம் நூற்றாண்டின் பின்பு ஐரோப்பாவிலிருந்து படையெடுப்பாளராய் அமெரிக்கா, கனடா மற்றும் லத்தீன் அமெரிக்கப் பகுதிகளிற் குடியேறிய ஐரோப்பியர், அங்கெல்லாம் அரசமைத்து வாழ்கின்றனர். அவுஸ்திரேலியா, நியூசிலாந்து போன்றனவும் இவ்வாறு குடியேற்றங்களால் உருவாக்கப்பட்ட அரசுகளே. இவ்வாறு 15ஆம் நூற்றாண்டின் பின்பு படையெடுப்பாளராய் அமெரிக்காவுக்குள் குடியேறிய ஐரோப்பியர் அரசமைத்து இன்று ஏகப் பெரும் வல்லரசாய் இருக்க முடியுமென்றால், ஈழத் தமிழர் ஏன் சுயநிர்ணய உரிமையுடன் வாழ முடியாது ? →

**இரு குழுக்களுக்கு இடையே பிணக்கேற்பட்டபோது, புத்த பகவான், ஒரு குழுவை ஆற்றிற்கு அப்பாலும், மறு குழுவை ஆற்றிற்கு இப்பாலும் தனித் தனியே பிரிந்து வாழுமாறு தீர்ப்பளித்தார்.**

கனடாவில் உள்ள ஆங்கிலேயரும், பிரெஞ்சுக்காரரும் அத்தேசத்தின் இணையான ஸ்தாபகர்கள் (Co - founders of a new nation) என்று அழைக்கப்படுகின்றனர். இலங்கையைப் பொறுத்தவரையில், ஈழத் தமிழரும் சிங்களவரும் இத்தீவின் இணை உரிமையாளர் (Co - owners) என்பதே சரியானது. இதன்படி இன்று ஈழத் தமிழர் பெரும்பான்மையாக வாழும் இலங்கைத் தீவின் வடக்கு - கிழக்குப் பிரதேசம் தமிழினத்திற்கு உரிமையான பிரதேசம்; சிங்களவர் பெரும்பான்மையாக வாழும் பிரதேசம் சிங்களவருக்கு உரிமையான பிரதேசம்.

*சந்திரிகா புதிய இனவாதியும் (neo chauvinist) புதிய பயங்கரவாதியும் (neo terrorist) ஆவார். இவரது சமாதானம் பற்றிய பேச்சென்பது, சாத்தான் ஓதும் வேதம் போன்றது. உலகின் நவீன வளர்ச்சி நிலைகளைக் கருத்திற்கொண்டு அதற்கு ஏற்றாற் போல் இனவாதத்தை நவீனப்படுத்தியவராக சந்திரிகா உள்ளார்.*

நவீன நடைமுறையில் ஓரினத்தன்மை கொண்ட அரசுகள் என்பதைவிட பல்லினத் தன்மை கொண்ட அரசுகளே (Multi - nation states) உலகில் 90வீதத்திற்குமேல் உள்ளன. இத்தகைய பல்லினத் தன்மைகொண்ட யதார்த்தத்தை சிங்களவர் ஏற்காததன் விளைவே, இலங்கையின் இன்றைய இனப்பிரச்சினையாகும்.

தேசியவாதம் எனும் நவீன பதத்திற்கு சிங்களத்தில் பிரயோகிக்கப்படும் பதம் ''ஜாதிவாதய'' என்பதாகும். சிங்களத்தில் ''ஜாதிவாதய'' என்ற பதத்திற்கு -இருக்கும் வரலாற்று கலாசாரப் பொருள் என்னவெனில், சிங்கள இனவாதம் என்பதேயாகும்; அதாவது, ஓரினத்தன்மை வாதமாகும்.

ஏனைய இனங்களின் உரிமைகளையும் தனித்துவங்களையும் மறுப்பதுதான், தேசியவாதம் என்பதற்கு சிங்களத்தில் உள்ள பொருளாகும்.

ஈழத் தமிழர் சிங்கள மக்களுடன் இணைந்து ஐக்கிய இலங்கையில் வாழும் தமது விருப்பத்தைத் தெளிவாகவே தெரிவித்திருந்தனர்; ஒற்றை ஆட்சி முறையின் கீழ்க்கூட மொழியுரிமையுடன் வாழ விரும்பினர். அந்த மொழி உரிமையைச் சிங்கள ஆட்சியாளர் மறுத்தனர். மூன்று மொழிகளை உத்தியோக மொழிகளாகக் கொண்டு சுவிற்சர்லாந்து தேசம் வாழமுடியும் என்றால், இரு மொழிகளை உத்தியோக மொழிகளாகக்கொண்டு ஏன் இலங்கையில் ஐக்கிய தேசியவாதம் கட்டி எழுப்பப்பட்டிருக்கக் கூடாது? ஆனால் இதற்கு மாறாக, 1956ஆம் ஆண்டு, தனிச்சிங்களச் சட்டத்தைச் சிங்கள ஆட்சியாளர் புகுத்தி ஐக்கியத்திற்கு ஆப்பு வைத்தனர்.

சிங்களவரின் இத்தகைய போக்கு, சமஷ்டித் தீர்விற்கான கோரிக்கையை தமிழ் மக்கள் மத்தியில் வலுவாக்கியது. சமஷ்டி முறையை உருவாக்குவது நாட்டைத் தமிழருக்குப் பிரித்துக் கொடுப்பதற்குச் சமன் என்று. சிங்கள இனவாதிகள் வாதிடுகின்றனர். சமஷ்டி முறையின் கீழ்த்தான் பல்தேசிய இனங்கள் ஓரரச அமைப்பின்கீழ் ஐக்கியமாக வாழ்வதை, சிங்கள இனவாதிகள் ஏன் புரிந்துகொள்ளத் தவறுகின்றனர்? சமஷ்டி முறையை மறுத்ததன் விளைவுதான் பிரிந்து செல்வதற்கான தனிநாட்டுக் கோரிக்கையாகும்.

ஓரினத்தன்மை கொண்டதாயினும் அரசு அளவாற் பெரியதாயின், நிர்வாக வசதிக்காக பிரதேச ரீதியாக சமஷ்டிமுறை உருவாக்கப்பட்டுள்ளதை உலகில் அவதானிக்கலாம். அதே வேளை, சிறிய அரசுகளாக இருப்பினும் பல்லினத் தன்மை கொண்டனவாயின், இனத் தனித்துவங்களைப் பேணுவதற்கும் இன முரண்பாடுகள் எழாது தவிர்ப்பதற்கும் சமஷ்டி முறை தோற்றுவிக்கப்பட்டுள்ளதைக் காணலாம். பல்தேசியவாதம் (Multi - nationalism) தேசியவாதத்தில் ஒரு முக்கிய அம்சமாகும். பல்தேசியவாதம் சரிவர இயங்குவதற்கு சமஷ்டி முறை அவசியமானது.

முரண்பாடுகள் வலுத்தபோது சமஷ்டிக் கோரிக்கையைத் தவிர வேறு மாற்று வழிகள் தமிழருக்கு இருக்கவில்லை. தமிழர் நீண்டகாலமாக - தொடர்ந்து உரிமைகள் மறுக்கப்பட்டு ஒடுக்கப்பட்டதுடன், சமஷ்டிக் கோரிக்கையும் மறுக்கப்பட்டதன் இறுதி விளைவே, தமிழீழக் கோரிக்கையும் அதற்கான ஆயுதப் போராட்டமுமாகும்.

சிங்கள ஆட்சியாளரின் தொடர்ச்சியான - பல்வேறு வகையான பாதிப்புக்களினாலும் தமிழர் மனமுடைந்தனர்.

தமிழ் மண்ணில் மேற்கொள்ளப்பட்ட அரசின் திட்டமிட்ட சிங்களக் குடியேற்றங்கள், காலத்திற்குக் காலம் தமிழர்மீது கட்டவிழ்த்து விடப்படும் இனப் படுகொலைகள், பொலிஸ் ஒடுக்குமுறை, இராணுவ ரீதியான தொடர்ச்சியான இன அழிப்பு நடவடிக்கைகள், ஒன்றுகூடும் உரிமை, கலாசார உரிமைகள், நடமாடும் உரிமை, குடியிருப்பு உரிமை, எண்ண வெளிப்பாட்டுரிமை, உயிர்வாழும் உரிமை என்பன அனைத்தும் சிங்கள ஆட்சியாளராற் தடுக்கப்பட்டுள்ளதுடன், தமிழரின் பொருளாதார அபிவிருத்தி, கல்வி அபிவிருத்தி என்பன எல்லாம் திட்டமிட்டுப் புறக்கணிக்கவும்பட்டுள்ளன. சிங்களவரால் தமிழர் பாரபட்சமாக எல்லா வகையிலும் நடத்தப்படுவதுடன், முற்றிலும் இரண்டாந்தரப் பிரஜைகளாய் ஒதுக்கப்படுகின்றனர். பாரிய இனப் படுகொலை, விமானக் குண்டுவீச்சு மற்றும் குண்டுவீச்சுத் தகர்ப்பு, தீவைப்பு, சொத்தழிப்பு, அவமானப் படுத்தப்படுதல் ஆகிய இவை அனைத்தினாலும் - இனியும் சிங்களவருடன் மத்தியில் இணைந்து வாழமுடியாது என்ற நிலைக்குத் தமிழர் வந்துவிட்டனர்.

நீண்டகால தொடர் ஒடுக்குமுறைகளின் விளைவாகத் தமிழரின் மனம் புண்பட்டு - இட்டு நிரப்பமுடியாத அளவு வளர்ந்துள்ள சூழலில், கண்துடைப்பு ''உரிமைகள்'' எதனையும் இன்று அங்கீகரிக்கும் நிலையில் தமிழர் இல்லை.

இத்துணை பகைமை வளர்ச்சி அடைந்த பின்பு, தமிழரை மேலும் ஒடுக்குவதை உலக அரங்கில் நியாயப்படுத்துவதற்காக - கண்துடைப்பு நடவடிக்கையாக - தமிழும் ''உத்தியோக மொழிகளுள்'' ஒன்றாக இன்று ஆக்கப்பட்டுள்ளது. ஆனால் நடைமுறையில் இது அவ்வாறில்லை. இதேபோல எத்தகைய கண்துடைப்பு ''உரிமைகளையும்'' தமிழர் ஏற்க மாட்டார்கள். இவை எல்லாம் காலம் கடந்தவையும் பயனற்றவையுமாகும். அமைதியாக வாழ்ந்த ஈழத் தமிழரை ஆயுதமேந்துமாறு சிங்கள அரசு நிர்ப்பந்தித்தது சிங்களப் பயங்கரவாதத்தின் விளைவே தமிழீழப் போராட்டமாகும்.

தமிழீழ விடுதலைப் போராட்டத்தை சிங்கள அரசு ''பயங்கரவாதம்'' என வர்ணிக்கின்றது. சிங்களப் பயங்கரவாதத்தில் இருந்து தப்பிப்பதற்கும், தற்காத்துக் கொள்வதற்கும் தமிழர் போராடுகின்றனர். டி. எஸ். சேனநாயக்கா, எஸ். டபிள்யூ ஆர். டி. பண்டாரநாயக்கா என்போர் சிங்களப் பயங்கரவாதத்தின் முதலிரு தூண்களாவர்; ஜே. ஆர். ஜெயவர்த்தனாவும் லலித் அத்துலத்முதலியும் இராணுவ ரீதியான பயங்கரவாதத்தின் மற்றிரு தூண்களாவர்; திருமதி சந்திரிகா பண்டாரநாயக்கா குமாரதுங்கா, இந்தச் சிங்களப் பயங்கரவாதத்தின் கொடுமுடியாவார். ஏனைய சிங்களத் தலைவர்களும் இப் பயங்கரவாதத்தில் ஆங்காங்கே பங்குடையவராவர்.



திமிருக்கு ஒரு பதில்!

சந்திரிகா 'புதிய இனவாதி'யும் (neo chauvinist), 'புதிய பயங்கரவாதி'யும் (neo terrorist) ஆவார். இவரது சமாதானம் பற்றிய பேச்சென்பது, சாத்தான் ஓதும் வேதம் போன்றது. உலகின் நவீன வளர்ச்சி நிலைகளைக் கருத்திற்கொண்டு அதற்கு ஏற்றாற் போல் இனவாதத்தை நவீனப்படுத்தியவராக, சந்திரிகா உள்ளார். டி. பி. விஜேதுங்காவின் இனவாதத்தை விடவும் சந்திரிகாவின் புதிய இனவாதமும், புதிய பயங்கரவாதமும் மிகவும் கபடம் நிறைந்தவை - வேஷம் மிக்கவை - ஆபத்தானவை.

சிங்கள இனவாதிகள் தமது ஒடுக்குமுறைக்குச் சாதகமான வகையில், சிங்கள மக்கள் மத்தியிலும் உலக அரங்கிலும் கருத்துக்களைப் பரப்புகின்றனர். தமிழர் சிங்களப் பகுதிகளில் குடியேறலாம்; அதேபோல சிங்களவரும் தமிழ்ப் பகுதிகளில் குடியேற ஏன தடைவேண்டும் என்று கேள்வி எழுப்புகின்றனர். சிங்களப் பகுதிகளில தமிழரின் உதிரியான குடியேற்றம் வேறு; தமிழ்ப் பகுதிகளில் சிங்களவரின் திட்டமிட்ட அரச குடியேற்றம் வேறு என்பது ஒருபுறம் கவனிக்கத்தக்கது. மறுபுறம், எண்ணிக்கையிற் சிறிய தமிழ் மக்கள் மத்தியில் எண்ணிக்கையிற் பெரிய சிங்கள இனம் குடியேறினால், சிறிய இனத்தின் இனப் பருமன்மாறி, அது இலகுவாகவே விழுங்கப்பட்டுவிடும்; அதேவேளை பெரிய இனத்தின் மத்தியில் சிறிய இனம் குடியேறினால், பெரிய இனம் பாதிக்கப்படமாட்டாது. அதாவது, பெரிய மீனுக்கும் சின்ன மீனுக்கும் இடையில் யாராவது விரும்பியவர் விழுங்கலாம் என்று ஒரு பொதுவான சட்டம் இருப்பதாக வைத்துக் கொள்வோம். சட்டப்படி சிறியமீன் எப்படி முயன்றாலும் பெரிய மீனை விழுங்க முடியாது. ஆனால், பெரியமீன் சிறியமீனை ஒரு கணத்துள் விழுங்கிவிடும். எனவே, இதில் பொதுவான சட்டங்கள் என்பதல்ல பரச்சினை; சிறிய இனத்துக்குப் பாதுகாப்பு வேண்டும் என்பதே பிரச்சனையாகும்.

12% தமிழர் அதனை விடவும் பெரிய நிலப்பரப்பைத் தமது தாயகமாகக்கோருகின்றனர் என்றும், அதுவே அவர்களது அநீதியான போக்குக்குச் சான்று எனறும் சிங்கள இனவாதிகள் கூறுகின்றனர். தமிழர் தாம வாழும் தொடர்ச்சியான பிரதேசததைத்தான் தமது தாயகமாகக் கோருகின்றனர். இன விகிதாசாரமும், தாயகமும எண்கணிதத்திற்குள் அடங்காது. உலகில் சிறியளவு சனத்தொகை விகிதத்தைக் கொண்டுள்ள அவுஸ்திரேலியரும், கனடியரும் சனத்தொகையாற் கூடிய நாடுகளது பிரதேச அளவை விடவும் பெரிய நிலப்பரப்புக்களைக் கொண்டுள்ளனா. அவரவர் வாழும் பிரதேசத்தை வைத்துக்கொண்டுதான் தாயகம் வரையறுக்கப்படுகிறது; சனததொகை விகிதத்திறகும் பிரதேச அளவிற்கும் இதில் தொடர்பில்லை.

சிங்கள- பௌத்த இனவாதத்தின் சாராம்சம் இதுதான். அதாவது, ஈழத் தமிழர் சிங்கள - பௌத்தரால் இனம் மாற்றப்பட வேண்டும் (Policy of assimilation); அவ்வாறு இனம் மாறத் தவறினால், அவர்கள் அழித்தொழிக்கப்பட வேண்டும் என்பதாகும். சந்திரிகா கூறும் ''சமாதானம்'', ''போர்'' என்பவற்றின் அர்த்தம் என்னவெனில், முதலாவதன் விளக்கம், சரணடைந்து இனம் மாறு; இரண்டாவதன் விளக்கம், அப்படிச் சரணடைந்து இனம் மாறத் தவறினால் அழித்தொழித்தல் என்பது.

சிங்கள - பௌத்தர் தம்மிடமுள்ள இந்திய எதிர்ப்பை தமிழின எதிர்ப்பாய் உருவமைத்துள்ளனர்; இதனால், ஈழத் தமிழரை இனமாற்றம் செய்தல் அல்லது அழித்தொழித்தல் என்ற கொள்கையை வகுத்துக்கொண்டனர். பண்டைய-தவறான-வரலாற்றுக் கண்ணோட்டத்தில் இருந்து, நவீன வரலாற்றை இவர்கள் அணுகுகின்றனர்; பொய்யானதும், குரூரம் நிறைந்ததுமான தமது ஐதீகக் கட்டுக்கதைகளுக்குத் தமிழரைப் பலியிடுகின்றனர்.

இரு குழுக்களுக்கு இடையே பிணக்கேற்பட்டபோது, ஒரு குழுவை ஆற்றிற்கு அப்பாலும், மறு குழுவை ஆற்றிற்கு இப்பாலும் தனித் தனியே பிரிந்து வாழுமாறு, புத்தபகவான் தீர்ப்பளித்தார். இட்டு நிரப்பப்பட முடியாத பகைமைக்கும் முரண்பாட்டிற்கும் மத்தியில் தமிழர் பிரிந்து செல்வதைத் தவிர வேறு வழியில்லை! ○

www.eelamview.com

மியூரியல் வயலட் ஹட்சின்

## "விளக்கேந்திய பெருமாட்டி"



வேறொரு தேசத்தை தாய் நாடாகக் கொண்டு, வேறொரு மொழியைத் தாய்மொழியாகக் கொண்டு, வேறொரு பண்பாட்டை வழக்கமாய்க்கொண்ட வேறொரு இனத்தில் பிறந்து வளர்ந்த அந்தப் பெருமாட்டி -

எமது மண்ணுக்கு வந்து, எமது மொழி பேசி, எமது இனத்தோடு வாழ்ந்து, எமது சமூகத்திற்காய்ப் பாடுபட்டு அருஞ்சேவையாற்றியவர்.

இடர் சூழ்ந்து தாயகம் துன்பப்படும்போது, இந்த மண்ணின் குழந்தைகள் பலர் விட்டு விலகிச் சென்றுகொண்டிருக்கையில் - எம் மண்ணிற்கு அப்பாற்பட்டவராயிருந்தும் - இங்கேயே வாழ்ந்து பெருந்தொண்டாற்றிய அந்த அம்மையார் -

எமது மாவீரர்களைப்போல, தமிழினம் கற்றுத் தெளிய வேண்டிய ஒரு முன்மாதிரியாக வாழ்ந்து, தனது வாழ்க்கையினாலேயே எமக்குப் பாடம் புகட்டிச்சென்ற அபூர்வமானவர்.

அவர்தான் மியூரியல் வயலட் ஹட்சின் அம்மையார். பிரித்தானியாவின் 'ஒக்ஸ்போட்' சர்வகலாசாலையின் 'முதுமாணி' (M-A.) பட்டதாரியான அன்னையை, 70 வருடங்களுக்கு முன்னர் கிறீஸ்தவ திருச்சபை, ஆசிரியப் பணிக்காக எங்களிடம் அனுப்பிவைத்தது.

கோப்பாய் கிறீஸ்தவக் கல்லூரியில் ஆசிரியையாகவும் அதிபராகவும், சுண்டுக்குளி மகளிர் கல்லூரியில் உப அதிபராகவும், உடுவில் பெண்கள் ஆசிரியர் பயிற்சிக் கல்லூரியில் அதிபராகவும் அம்மையாரின் சேவை விரிந்தது. எம்மண்ணின் குழந்தைகளுக்கு எழுத்தறிவிக்கும் மகத்தான பணிசெய்த அந்தப் பெருந்தகையார் -

தனது 59ஆவது வயதில் ஆசிரியப் பணியிலிருந்து ஓய்வுபெற்று பிறந்த நாட்டிற்குத் திரும்பிச் சென்றபோதும், இங்கு சமூகப் பணியாற்றும் எண்ணங்கொண்டு அதே ஆண்டிலேயே எம் மண்ணுக்குத் திரும்பிவந்தார்.

கிளிநொச்சியிலுள்ள 'கருணா நிலையம்' அன்னையினது இலட்சிய வாழ்வின் வரலாற்றுச் சாட்சி; அவர் ஆற்றிய திருப்பணியின் நினைவுச் சின்னம். 41 வருடங்களிற்கு முன்னர், காரிருள் கவிந்த கானகத்தின் நடுவில் ஒரு அரிக்கன் விளக்கோடு வந்து அந்தத் தாய் அத்திவாரமிட்டது 'கருணா நிலைய'த்தின் முதற் கட்டடத்திற்கு மட்டுமல்ல; ஆதரவற்ற பெண் குழந்தைகளுக்கும், துணையற்ற முற்றும் புறக்கணிக்கப்பட்ட பெண்களுக்கும் வாழ்வளிக்கும் தனது சேவைக்குந்தான். ஒவ்வொரு 'சிமென்ற்' பையாக மிதிவண்டியில் கட்டிக்கொண்டு வந்து, கருணா நிலையத்தை இந்த அளவுக்குக் கட்டி எழுப்பிய அன்னையின் உழைப்பு, இந்த ஊரின் பல வயோதிபர்களிடம் இன்றும் பசுமையாக நினைவிலுள்ளது. 'கருணா நிலைய'ப் பிள்ளைகளைக்கொண்டு உருவாக்குவித்த கைப்பணிப் பொருட்களை 40 மைல்களுக்கு அப்பாலிருந்த யாழ்நகருக்கு மிதிவண்டியில் எடுத்துச்சென்று விற்றதையும், சித்த சுவாதீனமற்ற சிறுமிகள் பலரைத் தானே கொழும்புக்குக் கூட்டிச்சென்று மருத்துவம் செய்வித்ததும், அவர்களைத் தொடர்ந்து வைத்துப் பராமரித்ததும், அன்னை ஆற்றிய இன்னும் எத்தனை எத்தனையோ அளப்பரிய காரியங்களும் 'கருணா நிலைய'த்தின் மூத்த உறுப்பினர்களிடம் நெஞ்சு கனக்கும் நினைவுகளாக நிறைந்துள்ளன.

அறுத்துறுத்து, தெளிவாக, எழுத்து மொழி நடையில் அம்மையார் தமிழ் பேசுவது அழகோ அழகு! "தமிழர்கள் தங்கள் மொழியையிட்டுப் பெருமைப்பட்டார்கள்; அவர்களோடு வாழ்ந்ததால் நான் தமிழைக் கற்று, அதில் பேசவும் எழுதவும் ஆசைப்பட்டேன்" என்று கூறுகின்ற அம்மையார், தனது ஆசிரியப் பணிக்கும், சமூகப் பணிக்கும் வசதியாக, இந்தியாவுக்கும் 'ஒக்ஸ்போட்' பல்கலைக்கழகத்திற்கும் சென்று தமிழ் மொழி படித்து வந்தார். மியூரியல் ஹட்சின் அம்மையார் அவர்கள், ஆங்கில மொழிமூலமான அன்றைய கற்பித்தல் முறைத் திட்டத்தில ஒரு தமிழாசிரியையாகவும் பணியாற்றினார் என்பது, சொல்லிக்காட்டப்பட வேண்டிய ஒன்று. மனிதர்கள் எப்போதும் தம் தாய்மொழியிலேயே யோசிப்பார்கள்; கனவு காணுவார்கள். ஆனால் அம்மையார் அவர்கள் தமிழ் மொழியிலேயே சிந்தித்தாராம் கனவுகளும் கண்டாராம் என்றால், எமது மொழியுடனும் எமது பண்பாட்டுடனும் அவர் இரண்டறக் கலந்து வாழ்ந்ததற்கு அது சான்றாகும்.

அன்னை வித்தியாசமானவர். தனது இறப்பின் பின் தனக்கு நினைவுச் சின்னங்கள் எதுவும் எழுப்பப்படக் கூடாது எனக் கட்டளையிட்டிருந்த அவர், தனது உடல் தகனம் செய்யப்பட வேண்டுமென விரும்பினார். 68 வருடங்களாக தான் வாழ்ந்து பணிசெய்த மண்ணுடனேயே தான் சங்கமிக்க வேண்டுமென ஆசைப்பட்ட அவர், தகனம் செய்யப்பட்ட தன் சாம்பரை இரணைமடுக்குளத்தில் கலந்துவிட வேண்டுமென வேண்டியிருந்தார்.

கடந்த மார்ச் 4ஆம் நாள் - தனது 98ஆவது வயதில் - எமைப் பிரிந்து சென்றுவிட்ட செல்வி மியூரியல் வயலட் ஹட்சின் அம்மையாரின் இறுதி விருப்பங்களை, 'கருணா நிலைய'த்தின் மூத்த உறுப்பினர்கள் கண்ணீருடன் நிறைவேற்றினார்கள்.

பிரித்தானியாவில், வசதியும் வாய்ப்பும் மிக்க ஒரு வளமான குடும்பத்தின் உறுப்பினராகப் பிறந்து, வளப்புமிக்க எதிர்காலத்திற்குரிய ஒரு பட்டதாரிப் பெண்மணியாகத் திகழ்ந்தபோதும் -

சொந்தங்களை விலக்கி, வாழ்வின் பற்றுதல்களைத் துறந்து, எம் மண்ணிற்கு வந்து இறக்கும்வரை, அழகாக அமைக்கப்பட்ட ஒரு ஓலைக் குடிசைக்குள் வாழ்ந்து, தனது இறுதி மூச்சுவரை எம் சமூகத்திற்காய் ஒப்பற்ற பணியாற்றி எம்மை விட்டுச் சென்றுவிட்ட அந்த அன்னையின் திருவடிகளின் மீது சிரம் தாழ்த்தி -

எமது தேசத்தின் சார்பிலும் எமது மக்களின் சார்பிலும் புலிகள் இயக்கம் தனது இறுதி வணக்கங்களைச் செலுத்துகின்றது. O



சிரித்திரன் சுந்தர்

## இலக்கியச் சொத்து

கரவெட்டியின் புழுதித் தெருக்களில் கும்மாளமடித்துத் திரிந்த அந்தத் துடியாட்டமான சிறுவன், பின்பொருகாலத்தில் - பாரிசவாத நோயினால் வலது காலும், வலது கையும் இயக்கமற்றுப் போன பின்பும், மனம் சோர்ந்து போகாமல் இலட்சியப் பணிசெய்து, இறுதி மூச்சுவரை மண்ணுக்கு இலக்கியப் பணிசெய்த உன்னதமான தமிழன்.

கலைப்பற்றும், பண்பாட்டுப் பற்றும், தமிழ்ப் பற்றும், தமிழீழப் பற்றும் நிறைந்த - முற்போக்கான சிந்தனைகளோடு ஒரு பரந்துபட்ட சமூகப் பார்வைகொண்ட - ஒரு தமிழ்ப்பணியாளன்.

அவர்தான் சுந்தர் என எல்லாருக்கும் அறிமுகமாகியிருந்த. உயர்திரு சிற்றம்பலம் சிவஞானசுந்தரம் அவர்கள். தமிழ் இலக்கிய உலகில் என்றுமே மறக்கப்பட முடியாத ஒரு சஞ்சிகை வெளியீட்டாளராக அவர் திகழ்கின்றார். கடந்த முப்பது ஆண்டு காலமாக வெளிவந்து, சிரிப்போடு சிந்திக்கத் தூண்டும் சீரிய கருத்துக்களைச் சொல்லிய சிரித்திரன் திங்கள் இதழின் உயிராகவும் 'உரு'ஆகவும் இயங்கியவர் அவர்.

ஐம்பதுகளில், தமிழினத்தின் எழுச்சிகரப் போர்க்குரலாக முழங்கிய சுதந்திரன் இதழில் கனமான அரசியற் கருத்தோவியங்களைத் தந்த சுந்தர் அவர்கள், பிற்காலத்தில் 'சவாரித்தம்பர்' என்ற சுவாரசியமான ஒரு பாத்திரப் படைப்பின்மூலம் தமிழ்ச் சமூகத்திற்கு பரந்த அளவில் அறிமுகமானார். அவருடைய சவாரித்தம்பர் ஒரு வித்தியாசமான மனிதர். 'தினகரன்', 'வீரகேசரி' ஆகிய செய்தி ஏடுகளைக் களமாக்கி - மாறுபாடான கோணங்களில், மாறுபாடான சுவைகளினூடு, சமூக சீர்திருத்தம் மையம் கொண்டிருக்கும் கருத்துக்களைச் 'சவாரித்தம்பர்' வெளிப்படுத்துவார். பின்பு 'சிரித்திரன்' சஞ்சிகையிலும் சவாரித்தம்பரைப் போல பல குறியீட்டுப் பாத்திரங்களை உருவாக்கிய அண்ணல் அவர்கள், அவைகளின் மூலமாக, மனங்களில் தைக்கும் பல உயரிய கருத்துக்களை அங்கதச் சுவையோடு எமக்குத் தந்தார்.

பள்ளிப்பராயத்தில், கட்டடக்கலைத் தொழில்நுட்பவியலில் அவரை நிபுணனாக்க ஆசைப்பட்ட தந்தை, உயர் கல்விக்காக அவரை இந்தியா அனுப்பியவேளை - கருத்தோவியக் கலைவடிவம் சுந்தர் அவர்களை ஆகர்சித்தது. கருத்தோவியங்களை, மக்களுக்கு விடயங்களை இலகுவாகப் புரியவைக்கக்கூடிய சிறந்ததொரு ஊடகமாகக் கண்ட அவர் - கட்டடக்கலையைக் கைவிட்டு, பம்பாயில் ஒரு ஓவியக் கல்லூரியில் இணைந்தார். "ஓவியர்கள் எல்லாரும் கருத்துப்படக்காரர்களாக இருக்க முடியாது; ஆனால் ஒரு கருத்துப்படக்காரன் ஓவியனாக இருக்கத்தான் வேண்டும். ஒரு ஓவியன் கருத்துப்படக்காரனாகவும் இருப்பது, அவனுக்கு ஒரு சிறப்புத் தகுதி." அத்தகைய தகுதியைப் பெற்றவராக சுந்தர் அவர்கள் விளங்கினார். கருத்துப்படங்களினூடாக அவர் காத்திரமான சமூக விமர்சனங்களைச் செய்தார். தூரிகைகளைப் பேரிகைகளாக்கி, சமூகத்தின் மனச்சாட்சியின் முன்னால் முழக்கினார். ஒரு தொழில்சார் ஓவியனாக அல்லாமல், சமூக மேம்பாட்டுப் பிரக்ஞை கொண்ட ஒரு புரட்சிகரமான கருத்தோவியக்காரனாகத் திகழ்ந்தார். இன்று - இலங்கைத் தமிழ்க் கலை இலக்கிய உலகில் தன்னிகரற்ற ஒரு கருத்தோவிய வரைஞனாக முத்திரையைப் பதித்துவிட்டு, எமைப் பிரிந்து அவர் சென்றுவிட்டார்.

இந்தியாவில் ஒரு ஓவிய மாணவனாகப் பயின்றுகொண்டிருந்த காலத்தில், அங்கு முனைப்புப் பெற்றிருந்த சுதந்திரப் போராட்டம்தான், தனக்குள்ளே விடுதலை வேட்கையைக் கிளரச்செய்தது எனச் சொல்கின்ற அவர், இந்தியாவிலிருந்து திரும்பியவுடன் 'சுதந்திரன்' இதழில் வரைந்த சிங்கள இனவாத அடக்குமுறைக்கு எதிரான அரசியல் கருத்தோவியங்கள், அவரது சுதந்திர உணர்வின் வெளிப்பாடுகளேயாகும். பின்பொரு காலத்தில் - 20 வருடங்களாக அவர் இடையறாது வெளியிட்டு வந்த 'சிரித்திரன்' சஞ்சிகைக்கு இந்தியப் படையின் ஆக்கிரமிப்பால் தடங்கல் ஏற்பட்டு, இந்தியப் படையிடம் அனுமதி பெற்றே வெளியிட முடியும் எனச் சட்டம் பிறந்தபோது - "என் மண்ணில் சஞ்சிகை வெளியிட அந்நியப் படையிடம் அனுமதி பெறுவதா?" எனச் சினந்து, இந்தியப் படை வெளியேறும்வரை, மனம் கனத்த துயரோடு 'சிரித்திரன்' வெளிவருவதை நிறுத்திவைக்கும் அளவுக்கு, இனமான உணர்வுமிக்க தேசியப் பற்றாளராக வாழ்ந்தவர் அவர்

தனது சிரித்திரன் சித்திரக் கொத்து என்ற நூலுக்காக சிறீலங்கா அரசாங்கத்தினால வழங்கப்பட்ட 'சாகித்திய மண்டலப் பரிசை'ப் பெற மறுத்து, அதற்குரிய காசோலையையும் திருப்பி அனுப்பிய அந்தப் பெருந்தகையின் செயல், அவரது தேசபக்தியினது உச்ச உயர்வடிவத்தை எடுத்தியம்பிய ஒரு நிகழ்வாகும்.

இத்தகைய அவரது உன்னத தன்மைகள்தான், தமிழீழத் தேசியத் தலைவரின் கைகளினால், தேசத்தின் அதிசிறப்பு விருதான 'மாமனிதர்' என்ற மகுடத்தைப் பெறும் தகுதிமிகு பெருமைக்குரியவராக அவரை மகிமைப்படுத்தியது.

தனது அறிவையும் ஆற்றலையும் தனது தாயக மண்ணுக்கே உரமிட்டு, எம் மண்ணின் விடிவிற்காகவும் எமது சமூகத்தின் மேம்பாட்டிற்காகவும் இறுதிவரை உழைத்து, அதில் எத்தகைய இடர் எதிர்ப்படும்போதிலும் சந்திக்கத் துணிந்து ஒப்பற்ற செயலாற்றிய அந்தச் செம்மல், மார்ச் 3ஆம் நாளன்று எமைப் பிரிந்து சென்றுவிட்டார்.

அன்னவரது இழப்பால் துயருறும் அவரது குடும்பத்தினருக்குத் தனது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவித்துக்கொள்கின்ற புலிகள் இயக்கம், 'சிரித்திரன் சுந்தர்' அவர்களின் நினைவுகளைச் சுமந்து அவருக்கு இறுதி வணக்கத்தினைச் செலுத்துகின்றது! O

www.eelamview.com

# புலிகள் இயக்கம்

# விடுதலை இயக்கமா?

# பயங்கரவாத அமைப்பா?

## கனடாவின் நீதிமன்றில் சுவையான விவாதம்

கனடிய நீதிமன்றம் ஒன்றில் நடைபெற்றுக்கொண்டிருக்கும் வழக்கு ஒன்று, சர்வதேச ரீதியில், பரவலாகப் பேசப்படும் அளவுக்கு முக்கியத்துவம் பெற்றுவருகிறது. சுரேஷ் மாணிக்கவாசகர் என்ற ஈழத் தமிழருக்கு எதிராக கனடிய குடிவரவுத் திணைக்களம் தொடுத்த வழக்கே அதுவாகும். பயங்கரவாத அமைப்பு ஒன்றின் அங்கத்தவர் என்பதே சுரேஷ் மீதான குற்றச்சாட்டாகும். அதாவது, புலிகள் இயக்கத்தின் அரசியல் நடவடிக்கைகளில் இவரும் ஈடுபடுகின்றார் என, வழக்குத் தொடுநர் குற்றஞ்சாட்டி உள்ளார். புலிகள் இயக்கத்தை ஒரு பயங்கரவாத அமைப்பாக வழக்குத் தொடுநர் கருதியதுதான் இந்த வழக்கின் முக்கிய அம்சமாகும். எனவே, புலிகள் இயக்கம் ஒரு பயங்கரவாத அமைப்பா அல்லது ஒரு தேசிய விடுதலை இயக்கமா என்பதை முடிவுசெய்யும் வகையில், நீதிமன்றில் வாதப்பிரதிவாதங்கள் நிகழத் தொடங்கியுள்ளன. பிரபல்யமான மேற்குநாட்டு சட்டநிபுணர்கள் பலரும் மற்றும் அறிஞர்களும் இந்த வழக்கில் நேரடியாகப் பங்குபற்றி வருகின்றனர்.

புலிகள் இயக்கத்தால் நடாத்தப்படும் விடுதலைப் போராட்டத்தின் சட்டபூர்வத் தன்மை பற்றி இந்த அறிஞர்கள் தெரிவிக்கும் கருத்துக்களை, நீதிமன்றம் கவனமாகச் செவிமடுத்து வருகின்றது. 'புலிகள் இயக்கம் பயங்கரவாத அமைப்பு அல்ல; அது ஒரு விடுதலை இயக்கம்' என்பது அந்த அறிஞர்களது கருத்தாகும். ஒடுக்குமுறைக்குள்ளாகியுள்ள தமிழினத்தின் அரசியல் விடுதலைக்காக ஆயுதப் போராட்டத்தைத் தேர்ந்தெடுக்கும்படி நிர்ப்பந்திக்கப்பட்ட, ஒரு தேசிய விடுதலை இயக்கமே புலிகள் இயக்கம் என்றும், சர்வதேச சட்டங்கள் மற்றும் நியமங்களின் அடிப்படையில் புலிகளின் ஆயுதப் போராட்டம் நியாயமானது என்றும் அந்த நிபுணர்கள் வாதிட்டுவருகின்றனர்.

கடந்த மார்ச் 19 ஆம் திகதி, கனடாவின் ரொறன்ரோ நகரில் உள்ள மேல் நீதிமன்றில் இந்த வழக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, இப்போதும் தொடர்ந்து நடைபெறுகின்றது. சர்ச்சையை ஏற்படுத்தி உள்ள ஒரு சுவையான வழக்காக இது பார்க்கப்படுவதால், சர்வதேசத்தின் கவனத்தை இந்த வழக்கு விசாரணை ஈர்த்துள்ளது.

அமெரிக்காவின் 'பொஸ்ரன்' பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் ஜொஸ்டன் அவர்கள், நீதிமன்றில் நிபுணத்துவ சாட்சியத்தை வழங்கினார். இவர், 'சர்வதேசச் சட்டமும் போர் விதிகளும்' என்ற தலைப்பில், அமெரிக்க இராணுவத் தலைமையகமான 'பென்ரகனில்' இராணுவ அதிகாரிகளுக்கு விரிவுரைகளை நிகழ்த்தியவராவார். நீதிமன்றில் இவர் சொன்னார், ''சிறீலங்காவில் நடைபெறும் ஆயுதப் போராட்டம், ஜெனீவா ஒப்பந்த நடைமுறைகளுக்கு அமையவே உள்ளது. இந்த சர்வதேச ஒப்பந்தத்தின் படி, போர் ஒழுங்குகளை மீறுவது என்பது ஒரு போர்க் குற்றமே ஒழிய, அது பயங்கரவாதமாகாது.'' அத்துடன் இந்தப் பேராசிரியரின் கருத்துப்படி, தன்னாட்சி உரிமைக்காகத் தமிழர் நடாத்தும் போராட்டத்தை ஒரு விடுதலைப் போராடடம் என்று ஏற்றுக்கொள்ளாது விட்டாலுங்கூட, கண்டனத்திற்கு உட்படுத்தப்பட்ட புலிகளின் நடவடிக்கைகளை பயங்கரவாத நடவடிக்கைகளாகப் பார்க்க முடியாது. தேவையானால், அவற்றை மனித உரிமை மீறல்களாக அல்லது போர்க் குற்றங்களாகவே பார்க்க முடியும். அத்துடன் இவர், ''பயங்கரவாதம் என்பது பொதுமக்களைப் பயமுறுத்துவது என்பதை மட்டுமே நோக்காகக் கொண்டிருக்கவேண்டும். வஞ்சம் தீர்க்கும் முகமாகவோ அல்லது ஒரு போர்த் தந்திரத்திற்காகவோ அல்லது பதிலடியாகவோ பொதுமக்கள்மீது ஒரு தாக்குதல் நிகழுமானால், அவற்றைப் பயங்கரவாத நடவடிக்கைகளாகக் கருத முடியாது; இவை போர்க் குற்றங்களாக அல்லது மனித உரிமை மீறல்களாக அல்லது ஒரு நாட்டின் தேசிய சட்டங்களை மீறும் ஒரு செயலாகவே கருதப்படவேண்டும்'' என மேலும் வலியுறுத்தி இருக்கிறார். தன்னுடைய வாதத்தில், ''புலிகளின் நடவடிக்கைகள் எவற்றையுமே பயங்கரவாதச் செயல்களாகக் கருத முடியாது'' என்று, அவர் நீதிமன்றுக்குச் சுட்டிக்காட்டினார்.

அமெரிக்காவின் ' ஓஹியோ ' பல்கலைக்கழகப் பேராசிரியர் ஜோன் குவிக்லியும் தனது நிபுணத்துவ சாட்சியத்தை வழங்கினார். ''தமிழர்கள் தன்னாட்சி உரிமைக்கு உரித்துடையவர்கள்'' என அவர் வலியுறுத்தினார். ''பயங்கரவாதம் என்பதற்கு சர்வதேச சட்டத்தில், திட்டவட்டமான வரையறை இல்லை; எனவே, புலிகளின் நடவடிக்கைகளைப் பயங்கரவாத நடவடிக்கைகளாகக் கருத முடியாது'' என அவர் வலியுறுத்தினார். இவருடன், அமெரிக்க ' இல்லினொயிஸ் ' பல்கலைக்கழகப் பேராசிரியர் பிரான்சிஸ் பொயிலியும் நிபுணத்துவ சாட்சியத்தை அளித்துள்ளார். இவர் பாலஸ்தீன விடுதலை இயக்கத்திற்கும் பொஸ்னிய மூஸ்லிம்களுக்கும் சட்ட ஆலோசகராகப் பணியாற்றி வருகின்றார். இஸ்ரேல் - பாலஸ்தீன ஒப்பந்தத்தில் இவருக்கு முக்கிய பங்குண்டு. இவர் கூறினார், '' காலனித்துவத்தின் தொடர்ச்சியே சிறீலங்கா அரசாங்கம் ஆகும். அத்துடன் அது ஒரு இனவாத அரசாங்கமுமாகும்.'' ஜெனீவா பிரகடனத்தின் மேலதிகக் குறிப்பு ஒன்றின் அடிப்படையில், '' புலிகள் இயக்கம் ஒரு விடுதலை இயக்கம் ஆகும்.'' சர்வதேச சட்டம் ஒன்றின் பிரகாரம், '' புலிகள் சிறப்பு உரிமை பெற்ற போராளிகளாவர்.'' ஆகவே, ஜெனீவா பிரகடனத்தின் மேலதிக குறிப்பின் பிரகாரம், ''புலிகள் இயக்கத்தை பயங்கரவாதிகள் எனக் குற்றம் சாட்ட முடியாது'' என, அவர் சட்டவாதம் புரிந்துள்ளார்.

**' தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கம் ' ஒரு பயங்கரவாத அமைப்பு அல்ல; தமிழரின் தன்னாட்சி உரிமையை வென்றெடுப்பதற்காக ஆயுதப் போராட்டத்தை வரித்துக்கொண்ட - ஒரு தேசிய விடுதலை இயக்கமே புலிகள் இயக்கமாகும்.**

**தன்னாட்சிக்கான உரிமை தமிழீழ மக்களுக்கு உண்டு. இந்த வகையில், சர்வதேச சட்டத்திற்கு அமைய ஆயுதப் போராட்டத்தை நடாத்தும் உரிமை. தமிழீழ மக்களுக்கு உண்டு. ஆகவே, புலிகள் இயக்கத்தால் தலைமைதாங்கி வழிநடாத்தப்படும் இந்தப் போராட்டம் ஒரு சட்டபூர்வமான நடவடிக்கையாகும்; அது பயங்கரவாதம் அல்ல!**

கனடாவின் ரொறன்ரோ நீதிமன்றம் ஒன்றில், நாடுகடத்தல் சம்பந்தப்பட்ட வழக்கு ஒன்றில் பங்குகொண்டிருந்த மேற்குநாட்டு அறிஞர் பலரால் இணக்கம் காணப்பட்ட கருத்துத் தொகுப்பு இதுவாகும்.

பேராசிரியர் விற்றகர் என்பவர் கனடாவின் புலனாய்வுச் சேவை பற்றி நிபுணத்துவ சாட்சியத்தை வழங்கியுள்ளார். '' கனடாவிடம் வெளிநாட்டு புலனாய்வுச் சேவை இல்லை '' எனத் தெரிவித்த அவர், '' புலிகள் இயக்கம் பற்றிய புலனாய்வுத் தகவல்களை இந்திய - சிறீலங்கா புலனாய்வு நிறுவனங்களே கனடாவுக்கு வழங்குகின்றன. இவை புலிகளுக்கு எதிரான இரகசிய சேவைகளாகும். ஆகவே, இவை தரும் தகவல்கள் உண்மையானதாக இராது '' என விளக்கமளித்தார்.

இந்திய - சிறீலங்கா புலனாய்வு நிறுவனங்களிடமிருந்து மற்றைய வெளிநாட்டு புலனாய்வுச் சேவையினர் புலிகள் பற்றிய தகவல்களைப் பெற்றிருந்தால், அத்தகைய தகவல்கள் நம்பகத்தன்மை அற்றவையாகும்.

மனித உரிமைகள் விவகாரத்தில் நிபுணத்துவம் பெற்ற அமெரிக்கப் பெண்மணி கறேன் பாக்கர் நிபுணத்துவ சாட்சியம் அளிக்கையில், '' 1983 இலிருந்து தமிழர் போராட்டம் ஒரு தேசிய விடுதலைப் போராட்டமாகத் திகழ்கின்றது'' என்றார். அதேவேளை, '' 1972 இலிருந்து 1983 வரை, உள்நாட்டுப் போர் நடைபெற்ற காலப்பகுதியாகும் '' என்று கால வரையறை செய்து விளக்கமளித்தார். மேலும் அவர் கூறுகையில், ''தமிழரின் தலைமைபெற்ற இராணுவக் கட்டமைப்பாக புலிகள் இயக்கம் இருக்கின்றது. அத்துடன் சீருடை அணிந்தவர்களாக போராளிகள் இருக்கின்றனர். ஒழுங்கான முறையில் கட்டளை அதிகாரம் பரவலாக்கப்பட்டிருக்கின்றது. ஆகவே, மேற்குறித்த இரண்டு வகையான காலப்பகுதிகளிலும் கண்டனத்திற்கு உள்ளாக்கப்பட்ட புலிகளது நடவடிக்கைகள், போர் நடவடிக்கைகளாக அல்லது போர்க் குற்றங்களாகவே கருதப்பட முடியும்; பயங்கரவாத நடவடிக்கைகளாக அவற்றைக் கருதக்கூடாது'' என்று நீதிமன்றுக்குச் சுட்டிக்காட்டினார்.

ஜேர்மன் - மலேசிய இணைந்த பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த டக்மர் கெல்மன் ராஜநாயகம், தமிழ் மக்களின் அரசியல் வரலாற்றை அங்கே விளக்கினார். ''இலங்கை என்ற தீவில் இரண்டு நாடுகள் இருந்தன; நிர்வாக வசதிக்காக அவை இரண்டும் இணைக்கப்பட்டன'' என அவர் கூறினார். அவர் மேலும் கூறுகையில், ''தமிழர்கள் தங்களைத் தனியான ஒரு தேசிய இனம் என்றும் கருதுகின்றனர்; அவர்களுக்குத் தனியான தாயகம் உண்டு. ஆகவே, புலிகள் இயக்கம் ஒரு தேசிய இயக்கமாகும்'' என்றார்.

சுவீடன் பேராசிரியரான பீற்றர் சோல்க் நிபுணத்துவ சாட்சியம் அளிக்கையில், ''சிங்கள ஆட்சிக்கெதிரான தனது போராட்டத்தைத் திரு. பிரபாகரன் அவர்கள், பிரித்தானிய ஆட்சிக்கெதிரான இந்திய சுதந்திரப் போராட்டத்துடன் ஒப்பிட்டுள்ளார்'' எனத் தெரிவித்தார். ''ஒரு முழுமையான தியாகமாகவே உயிர்த் தியாகத்தைப் புலிகள் கருதுகின்றனர்'' என்று கூறிய அவர், கரும்புலிகளுக்கும் 'ஹமாசின்' தற்கொலைக் குண்டுதாரிகளுக்குமிடையேயான வேறுபாட்டை விளக்க முற்பட்டார். ''கரும்புலிகளின் தியாகச் செயலுக்கு மதரீதியான நியாயத்தன்மைகள் கற்பிக்கப்படுவதில்லை '' என்றார். ''உயிர்த் தியாகம் தொடர்பான புலிகளின் கொள்கை மதசார்பற்றது; அத்துடன், புலிகளது தாக்குதல் இலக்குகள் பெரும்பாலும் இராணுவ இலக்குகளாகும்'' என்றும் அவர் விளக்கினார். மேலும் கூறுகையில், ''சயனைட் உட்கொள்வது என்பதை சாவை அரவணைப்பதற்கான ஒரு நடைமுறையாகப் புலிகள் கருதவில்லை; அதற்கு மாறாக, மற்றவர்களைப் பாதுகாத்து - உயிர்வாழவைக்கும் ஒரு நடவடிக்கையாகவே அதைக் கருதுகின்றனர்'' என்றார். ''1988 ஆம் ஆண்டு, ஜெனீவா ஒப்பந்தத்தில் புலிகள் கையெழுத்திட்டனர்'' என்று தெரிவித்த அவர், ''அந்த நாளில் இருந்து நீதிக்குப் புறம்பான கொலைகளில் புலிகள் ஈடுபடவில்லை'' என்று வலியுறுத்தினார். மேலும், ''புலிகள் ஒரு விடுதலை இயக்கம் மட்டுமல்ல; அது ஒரு சமூக இயக்கமும் ஆகும்'' என்று கூறினார். ''சாதிய முறைமையையும், சீதன வழக்கத்தையும் புலிகள் இயக்கம் ஒழித்துவிட்டது'' என்று கூறி, அதை நீதிமன்றின் கவனத்திற்குக் கொண்டுவந்தார். அத்துடன், ''பாரம்பரியமாக இருந்துவந்த தேசவழமைச் சட்டத்தின் விதிகளில் சீர்திருத்தத்தைக் கொண்டுவந்து, ஒரு சிறந்த நீதி அமைப்பொன்றைப் புலிகள் அமுல்படுத்துகின்றனர்'' என நீதிமன்றிற்கு விளக்கினார். அதேவேளை, ''தேசத்துரோகத்திற்கும் சமூக விரோதக் குற்றங்களுக்கும் இடையே தெளிவான வரையறைகளைப் புலிகள் வகுத்துள்ளனர்'' என்றும் சுட்டிக்காட்டினார்.

'யாழ் நூல்நிலைய எரிப்பை' ஒரு பண்பாட்டுப படுகொலையாக, பீற்றர் சோல்க் வர்ணித்தார். கொல்லப்பட்ட முன்னாள் அமைச்சர், காமினி திசாநாயக்காவே அந்த நூல்நிலைய எரிப்பிற்குப் பொறுப்பு என, முன்னாள் ஜனாதிபதி பிரேமதாசா விடுத்த அறிக்கையையும் பேராசிரியர் சுட்டிக்காட்டினார். அத்துடன், ''தனிநாடு ஒன்று அமைவது பற்றிய மக்கள் ஆணையை, 1977 தேர்தலின் மூலம் தமிழ் மக்கள் வழங்கிவிட்டனர்'' என்றும் நீதிமன்றின் கவனத்திற்குக் கொண்டுவந்தார்.

கனடாவாழ் தமிழர்களின் ஒன்றியம் - மற்றும் ஈழத் தமிழர் சங்கம் ஆகியவற்றின் தலைவரான சாம் துரைசாமி விளக்கமளிக்கையில், ''உலகத் தமிழர் இயக்கத்தின் இணைப்பாளர்தான் சுரேஷ். இந்த அமைப்பு தமிழரின் தன்னாட்சி உரிமைப் போருக்கு ஆதரவளிக்கின்றது. அத்துடன், தமிழ் மக்களின் அரசியல் பிரதிநிதிகளாக புலிகள் இயக்கத்தை அது ஏற்றுக்கொண்டுள்ளது'' என்று கூறினார். மேலும் அவர் கூறுகையில், ''புலிகள் இயக்கம் ஒரு பயங்கரவாத ''இயக்கம் என்று எப்போதுமே கனடிய வெளிவிவகார அமைச்சு அறிக்கை விடவில்லை. அதேவேளை, புலிகளும் - சிறீலங்கா அரசும் பேச்சுவார்த்தைமூலம் ஒரு தீர்வைக் காண வேண்டும் என்றே வெளிவிவகார அமைச்சு கூறியுள்ளது. கனடாவாழ் தமிழர் அமைப்புக்களின் சம்மேளனம் ஒழுங்குசெய்த கூட்டம் ஒன்றில், சிறீலங்காவுக்கான கனடாத் தூதுவர் பேசுகையில், தன்னாட்சி உரிமை கோரும் உரித்து இலங்கைத் தமிழர்களுக்கு உண்டு என்று வலியுறுத்தினார்'' எனத் தெரிவித்தார்.

வழக்கு விசாரணை தொடர்ந்து நடைபெறுகின்றது. ○

**புலிகளின் தாகம் தமிழீழத் தாயகம்**

www.eelamview.com